ஸ்ரீமத் இரா[illegible]

# ஜீவகாருணிய ஒழுக்கம்.

ஆர். என். [illegible]அவர்களால்

[illegible]

[illegible]த்தவம்

பலவான்குடி [illegible] வித்தியாசாலை

[illegible]


மகாமகோபாத்யாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்
பெயர் ஜீவகாருணிய ஒழுக்கம்
[illegible]
தொடர் எண் 3247 [illegible]
தொகுப்பெண் XVII [illegible]


பலவான்குடி,

ஸ்ரீமான் ராம. ரு. இராமசாமிசெட்டியார் அவர்கள்

பொருளுதவிகொண்டு,

பிரசுரஞ்செய்யப்பட்டது.

---


கோநகர்

[illegible] அச்சியந்திரசாலை.

1917—1000 [illegible]

[illegible]

# முகவுரை.

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
தின்னுயிர் நீக்கும் வினை:—திருக்குறள்.

கடவுள் மூன்று வகையான சரஉயிர்களைப் படைத்திருக்கிறா அவற்றுள் ஒருவகையுயிர்கள் மாமிசம் சாப்பிடத்தக்க சரீர அமைப்பை யுடையவைகள், வேறொரு வகையுயிர்கள் தாவரங்களைச்சாப்பிடத் தக்கவைகள். மற்றவகை உயிர்கள் மாமிசம் தாவரம் இரண்டையும் சாப்பிடத் தக்கவைகள். சிங்கம் புலி முதலிய மிருகங்கள் இறைச்சியை மாத்திரம் சாப்பிடத் தக்கவை. மாடு ஆடு குரங்கு யானை முதலிய மிருகங்கள் புல் இலை தான்யம் காய் பழம் முதலிய தாவர வர்க்கங்களை மாத்திரம் தின்னத் தக்கவைகள். நாய் பூனை முதலிய சில மிருகங்கள் மாமிசம் தாவரம் என்னும் இருவித போசனங்களையும் தின்னத் தக்கவை.

மாமிசம் விரைவாக அழுகி விஷமாகுந் தன்மையை உடையது. அது சரீரத்திலே அதிகநேரம் இருந்தால் அதன் விஷம் பாவி விடும். அது விரைவாக உடம்பிலிருந்து கழிந்து போகும்படியாகவே மாமிசம் தினனும் மிருங்கங்களின் குடல்கள் சிறியனவாக அமைக்கப் பட்டிருக்கின்றன. தாவர போசனம் விரைவில் பழுதுபடாது. அது நெடுநேரம் சரீரத்திலிருந்தால் அதன் பகுதிகள் சரீரத்தில் அதிகமாகச் சேரும் ஆதலால் சாகபக்ஷிணிகளின் குடல்கள் நீளமாக அமைக்கப் பட்டிருக்கின்றன. மனிதனுடைய சரீரத்தின் அமைப்பு தாவரங்களையே தின்னும் குரங்கின் சரீர அமைப்பை யொத்திருக்கின்றது. தாவரஞ் சாப்பிடும் மிருகங்களின் குடல்கள் போல் மனிதனுடைய குடலும் நீண்டிருக்கிறது. மனிதர்கள் மிகப்பழைய காலத்திலிருந்தே இலைகளையும் பழங்களையும் வித்துக்களையும்புசித்து வந்தார்கள் என்று மனித உற்பத்தியை ஊஹித்தறியும் அறிவாளிகள் சொல்லுகின்றார்கள்.

ஐரோப்பாவில் மிகப் பேர்பெற்ற சாஸ்திர பண்டிதரான ஆசிரியர் பாரன் கூவியர் (Prof. BaronCuvier) சொல்லுகிறதாவது:—
" மனித சரீரப் பகுதிகளையும் மிருக சரீரப் பகுதிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மனித சரீரம் காய்கனிகளைச் சாப்பிடும் மிரு

கங்களின் சரீரப் பாகுதிகளை எல்லா விதங்களிலும் ஒத்திருக்கின்றது. மாமிசம் சாப்பிடும் மிருகங்களின் சரீரப்பகுதிகளை ஒருவிதத்திலும் ஒத்திருக்கவில்லை. மனிதனை அதிகம் ஒத்திருக்கின்றமிருகம் வாலில்லாக்குரங்கு. அது காய்கனி தானியம் முதலியவைகளை மாத்திரம் சாப்பிடுகின்றது. மனிதனும் இந்தப் பொருள்களையே சாப்பிட வேண்டும்.”

கேம்ப்ரிட்ஜ் சர்வகலாசாலை வைத்திய சாஸ்திர ஆசிரியராகிய ஸிம்ஸ் உட்ஹெட் Prof, G. Sims. Woodhead. M. D, F. R. C. P., F. R. S.) சொல்லுகிறதாவது:— “மாமிசம் தேக சௌக்கியத்துக்கு பொருந்தமில்லாதது. தாவர போஜனம் சாப்பிடுகிறவர்கள் நன்றாக வேலை செய்யக் கூடியவர்களாய் இருக்கிறார்கள்.”

அமெரிக்காவிலே மிகப்பிரசித்தி பெற்ற நியூயார்க் ட்ரிப்யூன் (New York Tribune) என்னும் பத்திரிகைக்கு அதிபராகிய ஹொரேஸ் [illegible] reely)என்பவர் சொல்வது:—“மாமிசம் சாப்பிடு[illegible] விடுவானாயின் இன்னும் பத்து வருஷம் அ[illegible]ருப்பான். அவனுக்கு வரக்கூடிய வியாதிகளு[illegible].”

ஆதலால், ம[illegible]னுடைய ஸ்தூல சரீரம் தாவர வுணவுக்கு ஏற்றபடியே அமைக்கப் பட்டிருப்பதால், அதற்கு மாமிசவுணவைக் கொடுப்பது இயற்கைக்கு மாறானதென்றும் வியாதியை தரக்கூடியதென்றும் அறியக் கிடக்கலாயிற்று.

மாமிசம் ஸ்தூல சரீரத்துக்கு வியாதியை வருவிப்பது போலச் சூக்ஷ்ம சரீரத்துக்கும் வியாதியை வருவிக்கின்றது. அது கடுமையான உற்சாகத்தையும் மிருகத் தன்மையையும் உண்டாக்குகின்றது. இவைகளாலே கோபம் காமம் செருக்கு மதுபானப் பிரியம் முதலிய கெட்ட குணங்களுண்டாகின்றன. கோபம் காமம்செருக்கு இவை தாவர போசனக்காரருக்கும் உண்டுதானே என்று எதிர் நியாயம் சொல்லலாம். ஆயினும் தாவர போசனக்காரன் மாமிச போசனஞ் செய்தால்; அவனுக்கு இந்தக் கெட்ட குணங்கள் அதிகப் படும். மாமிசம் தின்னுவோன் அதை விட்டால் இந்தக்கெட்ட குணங்கள் குறையும். குடிவழக்கை விரும்புகிறவர்களில் பெரும்

பலரும் மாமிசம் சாப்பிடுகிறவர்களாய் இருக்கிறார்கள். மாமிசம் வெறித்தன்மையுள்ளதாதலால் அதுபோன்ற மதுபானத்திலே பிரியத்தை யுண்டாக்குகிறது. ஐரோப்பாவில் மதுபான விலக்குச் சங்கத்தார்கள், குடிவகையைக் குறைக்கிறதற்குத் தாவர போஜனமே ஏகமான வழியென்று கண்டு மாமிசபோசன விலக்குப் பிரசங்கங்கள் செய்கின்றார்கள். உள்ளி செம்முருங்கை முதலிய தாவரப் பொருள்களும் இப்படியான கெட்ட குணங்களை வளர்ப்பதனாலே தான அவைகளும் விலக்கப் பட்டன. ஆன்மாக்கள் ஈடேறுவதற்காகவுள்ள உடம்பை அழிப்பது போலப் பெரும்பாகம் என்ன இருக்கிறது! நாம் அவைகளைக் கொல்லவில்லையே என்றால், நமக்காக அவைகளைக் கொல்லப் படுதலால் நாமே அந்தக் கொலைக்குக் காரணர். ஆதலால், அந்தப்பாவத்திற் பெரும்பகுதி நமக்கேயாகும். ஒருமனிதனைக் கொல்லும்படி நான் ஒருவனை ஏவினால், நீதிஸ்தலங்களில் முதற்குற்றவாளி நான்தானென்று தீர்க்கப் படும்.

எல்லா உயிர்களும் கடவுளுடைய குழந்தைகள்; ஆதலால் நாம் கடவுளுக்காக எல்லா உயிர்களிடத்தும் அன்புவைத்து நன்மை செய்யவேண்டும், நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யாமலாவது இருக்க வேண்டும். அப்படியும் [illegible] களைக் கொல்லும்போது, அவைகள் எவ்வளவு [illegible], பார்த்தவன் இரக்கம் உள்ளவனானால், பின் [illegible] மாமிசம் சாப்பிட நினையான்.

எனவே, மாமிசம் நமது சரீரத்துக்குப்பொருத்த மில்லாதது. வியாதியைக் கொடுப்பது. கெட்ட குணங்களை எழுப்புவது. கொலைக்குக காரணமாயுள்ளது. நம்மிலே உள்ள தேவகுணமாகிய இரக்கத்தைக் கெடுப்பது. ஆதலால் மாமிச போசனம் அவசியம் நீக்கப்பட வேண்டியது.

## மாமிசாகார விலக்கைப் பற்றிய சில மேற்கோள்கள்.

### ருக்குவேதம்.

“மாமிசத்தை விலக்கி மற்ற பதார்த்தங்களைச் சுத்தி செய்து சமைத்துச் சாப்பிடுகிறவர்களுக்கு நல்ல சித்திகள் உண்டாகும்.”

## யஜுர்வேதம்.

“கடவுளே! எல்லாப் பிராணிகளிலும் நான் அன்பாக இருக்கவும், அவைகள் என்னிடத்தில் அன்பா யிருக்கவும அருள் செய்.”

## மஹாபாரதம்.

“எந்த சாஸ்திரத்திலும் விதிக்கப் பட்டிருந்தாலும் சரி, விலக்கப் பட்டிருந்தாலும் சரி, ஆன்மலாபமடைய விரும்புவன் எவ் விதமான புலாலுண்ணலையும் நீக்கவேண்டும்.”

## மனுதர்மம்.

“ஜீவஜந்துக்களுக்கு ஹானியில்லாமல் மாம்ஸத்தைச் சம்பாதிக்க முடியாது. மிருகங்களைக் கொல்வதனால் மோக்ஷ வழிக்குத் தடையாகிறது. ஆகையினால், மனிதன் கொலை செய்யாதிருக்கட்டும்”

## சடகோபர்.

“மறுக்கி வல்வலைப் படுத்திக்
குமைத்திட்டுக் கொன்றுண்பர்
அறப்பொருளை யறிந்தோரார்
ஈதென்ன உலகியற்கை.”

## திருவள்ளுவர்.

“கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.”

## ஔவை.

“நோன்பென் பதுவே கொன்று தின்னாமை.”

## தாயுமானவர்.

‘கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே’
“கொலைகளவு கட்காமம் கோட்பல விட்டாலன்றோ
மலையிலக்கா நின்னருடான் வாய்க்கும் பராபரமே.”

ஸ்ரீமத் ராமலிங்க சுவாமிகள்.

"ஆணைப் பெண்ணாக்கி, ஒருநொடியில், அப்பெண்ணை ஆணாக்கிச் செத்தவர்களை யெழுப்புகின்ற திறமுடையவனானாலும், கொலை செய்து புலாலுண்ணுமக் கருத்துடையவனாயின் சத்தியமாய் அவனை ஞானியென்று கூறவே கூடாது."

பதிபசுபாசவிளக்கம்.

" கங்கையிற் படிந்திட் டாலும்
கடவுளைப் பூசித் தாலும்
மங்குல்போற் கோடி தானம்
வள்ளலாய் வழங்கி னாலும்
சங்கை யிலாத ஞான
தத்துவ முணர்ந்திட் டாலும்
பொங்குறு புலால் புசிப்போன்
போய்நர கடைவ னன்றே."

டாக்டர்பெல்.

"மாம்ஸ போஜனம் கையாடுவதே மலபந்தத்தைஅபிவிருத்தி செய்வதற்கும், பெருங்குடலில் விஷத்தன்மை ஏற்படுவதற்கும், இதனால் உண்டாகும்பலவகைப்பட்ட ரோகங்கட்கும் பெரும்பாலும் உத்தரவாதமாகின்றது."

ரேவரண்ட் ஆர். ஜே. போர்டியஸ்.

"நாம் ஒருகாலத்திலேயே, ஆன்ம தத்துவ முணர்ந்த ஞானிகளாயும், பிடுங்கித் தின்னும் மிருகங்களாயும் இருக்கமுடியாது."

ப்ரோபஸர் ஹட் சின்ஸன்.

"கெட்டுப்போன மீனைப்புசிப்பதால் பெரும்பாலும் குஷ்டரோகம் உண்டாகிறது."

டாக்டர் பென்விண்ட், டி. டி. ஸி.

"ஆப்பிரிக்கா சுதேசிகள், முப்பத்திரண்டு பற்களும் செம்மையா யிருக்கப் பெற்றவர்கள், நகரவாஸத்திற்கு வந்து அகப்பட்டுக் கொண்டவுடன் மாமிசம் புசித்துப் பல் நோயில் அகப்பட்டுக் கொண்டார்கள்."

வாய்ட்.

"மாம்ஸ ரஸத்தால் போஷிக்கப்பட்ட நாய்கள் சீக்கிரத்தில் இறந்து போகின்றன!!

ஸிட்னி பியர்ட்.

"எந்த உருவத்திலாவது மாம்ஸ ஆகாரத்தைக் கொள்வது நமது இயற்கைத் தன்மையின் ஒரு முக்யமான நியதியை மீறுகின்றது."

ஜோஸையா ஓல்ட் ஃபீல்டு.

"மாம்ஸ பக்ஷணிகள், மனிதத் தன்மை வாய்ந்திராத தொழிலைச் செய்யும் பரிபாவத்திற்குட்பட்ட மனிதவகுப்பாரை வளர்ப்பதற்கு உத்தரவாதியாகிறார்கள்."

நாலடியார்.

"துக்கத்துட் டூங்கித் துறவின்கட் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு—தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே புலன்கெட்ட
புல்லறி வாளர் வயிறு."

---

[இது யாழ்ப்பாணம், விக்டோரியாக் கலாசாலை ஆசிரியர், சு. சிவபாதசுந்தரம், B. A. அவர்கள் செய்துள்ள மாமிசபோசனம் என்னும் சிறு நூலிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது.]

மோ. வே. கோவிந்தராஜன்.

## ஆகார உணவுகளின் அங்கம்.

| | தண்ணீர். | புரோடீன் | கொழுப்பு | சர்க்கரை. | லோகச் சத்துக்கள். | மொத்த பலத்தைத் தருகிறது. |
|---|---|---|---|---|---|---|
| **மாம்ஸ ஆகாரங்கள்.** | | | | | | |
| கொழுப்பில்லாத மாட்டு இறைச்சி ... | 72· 0 | 19. 3 | 3. 6 | ... | 5·1 | 28. 0 |
| ஆட்டு இறைச்சி ... ... | 85. 2 | 14. 5 | 19. 5 | ... | 0.8 | 34. 8 |
| கொழுப்புள்ள பன்றிக்கறி... | 39. 0 | 9. 8 | 48. 9 | ... | 2·3 | 61. 0 |
| மான் இறைச்சி ... ... | 75. 7 | 19. 7 | 1. 9 | ... | 1·1 | 22. 7 |
| கோழிக்குஞ்சு ... ... | 67· 4 | 21.26 | 6.68 | ... | 1 37 | 32.31 |
| சோல் என்னும் மீன் ... | 86, 1 | 11. 9 | 0. 2 | ... | 1.2 | 13, 3 |
| **முட்டை ஆகாரங்கள்,** | | | | | | |
| முட்டைகள் ... ... | 64. 0 | 14· 0 | 10. 5 | ... | 1.5 | 26· 0 |
| வெள்ளைக் கரு ... ... | 78, 0 | 12. 4 | ... | ... | 1,6 | 14· 0 |
| மஞ்சள் கரு ... ... | 52. 0 | 16. 0 | 30. 7 | ... | 1·3 | 48· 0 |
| **பால் ஆகாரங்கள்.** | | | | | | |
| பசுவின் பால் ... ... | 86. 0 | 4. 1 | 3. 9 | 5. 2 | 0·8 | 14· 0 |
| பாலாடை ... ... | 28. 6 | 4. 0 | 65. 0 | ... | 0.4 | 69. 4 |
| பாலடைகட்டி ... ... | 36. 0 | 28. 4 | 31. 1 | ... | 4. 5 | 64· 0 |
| ,, ஸ்டில்டன் ... | 32. 0 | 26. 2 | 37.8 | ... | 4.0 | 67· 0 |
| ,, பார்மஸென் ... | 27.56 | 44.08 | 15.95 | ... | 5,72 | 65.75 |
| வெண்ணெய் ... ... | 12, 0 | ... | 86.4 | ... | 0.8 | 87· 2 |
| **தானிய ஆகாரங்கள்,** | | | | | | |
| கோதுமை ரவை ... ... | 11. 7 | 11. 4 | 1. 3 | 71. 0 | 3·0 | 86· 7 |
| ,, மாவு ... ... | 12.11 | 11. 2 | 1. 2 | 73. 6 | 0·8 | 86· 8 |
| சோள மாவு ... ... | 14. 2 | 9. 3 | 5· 0 | 66. 5 | 2.0 | 82· 8 |
| ஓட்மாவு ... ... ... | 10. 4 | 15. 6 | 6·11 | 63. 6 | 3·0 | 89· 1 |
| வாற்கோதுமை ... ... | 14. 6 | 6. 7 | 1· 3 | 75. 5 | 1·1 | 84· 6 |
| தவிடு ... ... ... | 12. 5 | 18. 4 | 3. 5 | 43· 6 | 6·0 | 69· 5 |
| அரிசி ... ... ... | 12. 4 | 7. 8 | 0· 4 | 79· 0 | 0.4 | 87· 6 |
| கோதுமையால் செய்யப் பட்ட சிற்றுண்டி ... | 10. 8 | 11, 7 | 1. 6 | 72· 9 | 3 0 | 89· 2 |
| ஜவ்வரிசி, மாவள்ளிக்கிழங்கு, அரோரூட்டரிசி ... | 14. 0 | 1. 6 | 0. 6 | 83. 0 | 0.4 | 85. 6 |

## ஆகார உணவுகளின் அங்கம்.

| | தண்ணீர் | புரோடீன். | கொழுப்பு | சர்க்கரை. | லோகசம்பந்தம். | மொத்த பலந்தரும் சக்தி. |
|---|---|---|---|---|---|---|
| **ரொட்டி ஆகாரங்கள்.** | | | | | | |
| கோதுமை ரவைரொட்டி... | 36· 4 | 9· 7 | 0· 9 | 4 97 | 1.3 | 61. 6 |
| **காயிதானிய ஆகாரங்கள்.** | | | | | | |
| நவதானியம் ... ... | 12· 3 | 25· 9 | 1· 9 | 53· 0 | 3·0 | 83· 0 |
| உலர்ந்த பட்டாணி ... | 6· 3 | 23· 8 | 2· 1 | 58· 7 | 2 1 | 86· 7 |
| பச்சை பட்டாணி .. | 81· 8 | 3. 4 | 0· 4 | 13· 7 | 0·7 | 18· 2 |
| பட்டாணி ஸூப்... ... | 84·26 | 3·38 | 0·93 | ... | ... | 4 31 |
| பட்டாணி மாவு ... ... | 14· 3 | ·22· 4 | 2· 5 | 51· 3 | 3·0 | 79· 2 |
| பட்டாணி பருப்பு ... | 6· 5 | 28, 3 | 46· 2 | 1· 8 | 3·3 | 79· 6 |
| **மரக்கறி ஆகாரங்கள்.** | | | | | | |
| பச்சை முள்ளங்கி ... | 86· 5 | 1· 2 | o· 3 | 9. 2 | 0·9 | 11· 6 |
| கோவிஸ் முட்டை ... | 90· 8 | 2· 2 | 0 4 | 4. 7 | 0·8 | 8· 1 |
| வெங்காயம் ... | 91· 8 | 1· 2 | 0· 5 | 5. 8 | 0·7 | 8· 2 |
| உருளைக் கிழங்கு ... ... | 75· 0 | 2· 2 | 0· 2 | 21. 0 | 1 0 | 24· 4 |
| கோவிஸ் கீரை ... ... | 90· 0 | 1· 9 | ... | 2. 5 | 1·2 | 5· 6 |
| **பழவர்க்க ஆகாரங்கள்.** | | | | | | |
| கதலிப் பழம் ... ... | 74· 1 | 1· 9 | 0· 8 | 22. 9 | 1·0 | 26· 6 |
| சீமை இலந்தம்பழம் ... | 84· 8 | 0· 4 | 0· 5 | 12. 0 | 0·5 | 12. 4 |
| பச்சை திராட்சைப் பழம் ... | 78· 2 | 1· 3 | 1· 7 | 14. 7 | 0·5 | 18· 2 |
| **ஆகாரங்கள்.** | | | | | | |
| காய்ந்த திராட்சைப் பழம் ... | 14· 0 | 2· 5 | 4· 7 | 64 ·7 | 4·1 | 76· 0 |
| அத்திப்பழம் ... ... | 17· 5 | 6· 1 | 0· 9 | 65· 9 | 2 3 | 75· 2 |
| **பருப்பு ஆகாரங்கள்.** | | | | | | |
| கடுக்காய் ... ... ... | 7· 2 | 15· 8 | 57· 4 | 13· 0 | 2 0 | 88· 2 |
| சாரைப்பருப்பு ... ... | 38· 0 | 18. 4 | 28· 5 | 11· 1 | 1·5 | 59· 5 |
| தேங்காய் ... ... | 46· 6 | 5· 5 | 36· 0 | 8· 1 | 1·0 | 50· 5 |
| பாதுமை ... ... | 6· 2 | 23. 5 | 53· 0 | 7· 8 | 3.0 | 87· 3 |

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஜீவகாருணிய ஒழுக்கம்.

## பரசிவ வணக்கம்.

அன்பெனும் பிடியு ளகப்படு மலையே
அன்பெனுங் குடில்புகு மரசே
அன்பெனும் வலைக்குள் படுபரம் பொருளே
அன்பெனுங் கரத்தம ரமுதே
அன்பெனுங் கடத்துள் அடங்கிடுங் கடலே
அன்பெனு முயிரொளி ரறிவே
அன்பெனு மணுவுள் அமைந்தபே ரொளியே
அன்புரு வாம்பர சிவமே.

உலகத்தில் மனிதப்பிறப்பைப்பெற்றுக்கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க ஆன்மலாபத்தைக் காலமுள்ளபோதே அறிந்து அடையவேண்டும்.

அந்த ஆன்மலாபம் எதுவென்று அறியவேண்டில்; எல்லா அண்டங்களையும் எல்லாப்புவனங்களையும் எல்லாப்பொருள்களையும் எல்லாச்சீவர்களையும் எல்லா ஒழுக்கங்களையும் எல்லாப்பயன்களையும் தமது பூரணவியற்கை விளக்கமாகிய அருட்சத்தியால் தோன்றி விளங்க, விளக்கஞ்செய்விக்கின்ற இயற்கையுண்மை வடிவினரா

கிய கடவுளின் பூரணவியற்கை இன்பத்தைப்பெற்று எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவுந் தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரியவாழ்வை இந்த மனிதப் பிறப்பினாலடையத்தக்க ஆன்மலாபமென்று உண்மையாக அறியவேண்டும்.

இயற்கை யின்பத்தைப்பெற்றுத் தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரியவாழ்வை எதனால் அடையக்கூடுமென்று அறிய வேண்டும். கடவுளின் இயற்கைவிளக்கமான அருளை எதனாற் பெறக்கூடுமென்று அறியவேண்டில்; ஜீவகாருணிய ஒழுக்கத்தினாற் பெறக்கூடுமல்லது வேறெந்த வழியாலும் சிறிதும் பெறக்கூடாது என்று உறுதியாக அறியவேண்டும். கடவுளின் அருளை ஜீவகாருணிய ஒழுக்கத்தினால் பெறக்கூடுமல்லது வேறெந்தவழியாலும் பெறக்கூடாதென்பது எப்படியென்னில்:—

அருள் என்பது, கடவுள் தயவு, கடவுள் இயற்கை விளக்கம்; ஜீவகாருணியமென்பது, ஜீவர்கள் தயவு, ஜீவர்கள் ஆன்ம இயற்கை விளக்கம். இதனால் தயவைக்கொண்டு தயவைப்பெறுதலும், விளக்கத்தைக்கொண்டு விளக்கத்தைப்பெறுதலுங் கூடும். வேறொன்றினாற் பெறக்கூடாமை அநுபவமாகலில், ஜீவகாருணியத்தைக் கொண்டு அருளைப்பெறுதல் கூடும். வேறொன்றினாலும் பெறக் கூடாமை நிச்சயம். இதற்கு வேறு பிரமாணம் வேண்டாம் என்று அறியவேண்டும். அருளைப்பெறுவதற்கு ஜீவகாருணியமே வழியாகலால், ஞானவழியென்பதும் ஸந்மார்க்கமென்பதும் ஜீவகாருணிய ஒழுக்கமென்றும், அஞ்ஞானவழியென்பதும் துன்மார்க்கமென்பதும் ஜீவகாருண்ய வொழுக்க மில்லாமை யென்றும் அறியப்படும்.

ஜீவகாருணியம் விளங்கும்போது அறிவும் அன்பும் உடனாக நின்று விளங்கும்; அதனால் உபகாரசக்தி விளங்கும்; அந்த உபகார சக்தியால் எல்லா நன்மைகளுந் தோன்றும். ஜீவகாருணியம் மறையும்போது அறிவும் அன்பும் உடனாக மறையும். அதனால் உபகாரசக்திமறையும்; உபகாரசக்தி மறையவே எல்லாத் தீமைகளுந் தோன்றும். ஆகலில் புண்யம் என்பது ஜீவகாருணியமொன்றே

என்றும்; பாவமென்பது ஜீவகாருணியமில்லாமையே என்றும் அறியப்படும். ஜீவகாருணிய ஒழுக்கத்தினால் வரும் விளக்கமே கடவுள் விளக்கமென்றும்; ஜீவகாருணிய ஒழுக்கத்தினால் வரும் இன்பமே கடவுள் இன்பமென்றும்; இவ்விளக்கத்தையும் இன்பத்தையும் பலகால் கண்டு அநுபவித்துப் பூர்த்தியடைந்த ஸாத்தியர்களே ஜீவன் முக்தர் என்றும்; அவர்களே கடவுளை அறிவாலறிந்து கடவுள் மயமாவார்களென்றும் ஸத்தியமாக அறியவேண்டும். ஆனால், ஜீவகாருணிய ஒழுக்கம் என்பது என்னவெனில்:—

ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக உண்டாகின்ற ஆன்மவுருக்கத்தைக்கொண்டு தெய்வ வழிபாடுசெய்து வாழ்தல் என்று அறியவேண்டும். ஜீவர்கள் விஷயமாக ஆன்மவுருக்கம் எப்போது உண்டாகும் என்னில்:—ஜீவர்கள், பசி தாகம் பிணி இச்சை எளிமை பயம் கொலை இவைகளால் துக்கத்தை யநுபவிக்கக் கண்டபோதாயினும் கேட்டபோதாயினும் இவ்வாறுண்டாகுமென்று அறிந்தபோதாயினும் ஆன்மவுருக்கம் உண்டாகுமென்று அறியவேண்டும். ஜீவகாருணியம் உண்டாவதற்கு உரிமை எதுவெனில்:—ஜீவர்களெல்லாம் ஒரு தன்மையாகிய இயற்கையுண்மை ஏகதேசங்களாய்ச் சர்வசக்தியுடைய கடவுளால் ஸ்ருஷ்டிக்கப்பட்டபடியால், ஒருரிமையுள்ள ஸகோதரர்களேயாகும். ஸகோதரர்களுள் ஒருவர் ஒரு ஆபத்தால் துக்கப்படுகின்றபோதும் துக்கப்படுவாரென்று அறிந்தபோதும் அவரைத் தமது ஸகோதரரென்று கண்ட மற்றொரு ஸகோதரருக்கு உருக்கமுண்டாவது ஸகோதர உரிமையாதலின், ஒரு ஜீவன் துக்கத்தை அநுபவிக்கக்கண்டபோதும் துக்கப்படுமென்று அறிந்தபோதும் மற்றொரு ஜீவனுக்கு உருக்கமுண்டாவது பழைய ஆன்மவுரிமை என்று அறியவேண்டும்.

ஜீவர்கள் துக்கப்படுகின்றதைக் கண்டபோது, சிலர் ஜீவகாருணியமில்லாமல் கடின சித்தர்களாய் இருக்கிறார்கள்; இவர்களுக்கு ஸகோதரவுரிமை இல்லாமற்போவது ஏன் என்னில்;—துக்கப்படுகின்றவரைத் தமது ஸகோதரரென்றும் துக்கப்படுகின்றாரென்றும் துக்கப்படுவாரென்றும் அறியத்தக்க ஆன்ம அறிவு என்கின்ற கண்

ணாது அஞ்ஞான காசத்தால் மிகவும் ஒளிமழுங்கின படியாலும் அவைகளுக்கு உபகரணமாகக் கொண்ட மனம் முதலான உபநயனங்களாகிய கண்ணாடிகளும் ப்ரகாச ப்ரதிபலிதம் இல்லாமல் தடிப்புள்ளவைகளாக இருந்தபடியாலும் கண்டறியக் கூடாமையாயிற்று. அதனால் ஸ்வோதந்தரவுரிமையிருந்தும் ஜீவகாருணிய முண்டாகாமலிருந்ததென்றறியவேண்டும்.

இதனால் ஜீவகாருணியம் உள்ளவர் ஆன்மதிருஷ்டி விளக்கமுள்ளவர் என்று அறியப்படும். ஜீவர்களுக்குப் பசி தாகம் பயம் முதலியவற்றால் வரும் துன்பங்களெல்லாம் மனம் கண் முதலிய கரணேந்திரிய அநுபவங்களல்லது ஆன்ம அநுபவங்களல்ல. ஆதலால் ஜீவகாருணியம் கொள்வதில் விசேஷப்பிரயோஜனம் இல்லையேயென்னில்;—இந்த ஸ்தூலதேகத்தில் ஜீவனாகவிருக்கிற ஆன்மாவும் அறிவுக்கறிவாயிருக்கிற கடவுளியற்கை விளக்கமும் தவிர, கரணம் இந்திரியம்முதலிய மற்றவையெல்லாம் கருவிகளாகிய தத்துவஜடங்களேயல்லது சித்துக்கள் அல்ல. ஆகலின் ஸுகதுக்கங்களை ஜடங்கள் அநுபவிக்க அறியா. செம்மண் சந்தோஷித்தது; துக்கித்தது என்று சொல்லப்படாது; அதுபோலவே மனம் ஸந்தோஷித்தது துக்கித்தது என்று சொல்லப்படாது. செம்மண்ணினால் தேகவாழ்க்கைக்குவீடுகட்டிக்கொள்வதுபோல, மனம்முதலிய கரணேந்திரியங்களைக்கொண்டு ஜீவவாழ்க்கைக்குக்கடவுளாற்கட்டிக்கொடுக்கப்பட்டதேஹம் சிறியவீடாகும். இன்பதுன்பங்களை வீட்டிலிருக்கின்றவன் அநுபவிப்பானல்லது, வீடு அநுபவிக்கமாட்டாது. அன்றியும், காசத்தினால் ஒளிமழுங்கப்பட்ட உபநயனங்களாகிற கண்ணாடிகளாற் பார்க்கின்ற கண்கள் துன்பவிஷயங்களைக்கண்டபோது, அக்கண்கள் நீர் சொரியுமேயல்லாது, கண்ணாடி நீர்சொரியமாட்டாது; ஆகலின், ஆன்மதிருஷ்டிக்கு உபநயனங்களாக இருக்கின்ற மனம் முதலான கருவிகள், சுகதுக்கங்களை அநுபவிக்கமாட்டா; ஆன்மாவே அநுபவிக்கும் என்று அறியவேண்டும்.

ஒரு ஜீவனுக்கு சுகம்நேரிட்டபோது, மனம் மகிழ்கின்றது; துக்கம் நேரிட்டபோது, மனம் தளர்கின்றது; ஆகலின், சுகதுக்கங்களை அம்மனம் அநுபவிப்பதாக அறியப்படாதோ என்னில்.

அறியப்படாது. பளிங்கினாற் செய்த வீட்டினுள்ளிருக்கின்ற வீட்டுத் தலைவனுடைய தேகவிளக்கமும் தேகச்சோர்வும், அந்தப் பளிங்கு வீட்டில் பிரதிபலித்துப் புறத்தில் தோன்றுவதுபோலும், கண்களின் மலர்ச்சியும் சோர்வும் அக்கண்களினிட்ட உபநயனங்களிலு பிரதிபலித்துப் புறத்திற்றோன்றுவதுபோலும், சுகதுக்கங்களால் ஆன்மாவுக்குண்டாகிற மகிழ்ச்சியும் தளர்வும் மனம் முதலான கரணேந்திரியங்களில் பிரதிபலித்துப் புறத்திற்றோன்றுகிறது. ஆகலின், சுகதுக்கங்கள் ஆன்மாவுக்கு அநுபவமென்றும் சுகதுக்கங்களை அறிந்து அநுபவிப்பதற்குக் கரணேந்திரியங்கள் ஆன்மாவுக்கு உபகாரகருவிகளாகுமென்றும் அறியவேண்டியது.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவர்களில் அநேகர், பசி தாகம் பயம் முதலியவற்றால் மிகவுந் துன்பப்படுகின்றது. ஏனெனில்:— முன்தேகத்தில் ஜீவகாருணியவொழுக்கத்தை விரும்பாமல், கடின சித்தர்களாகித் துன்மார்க்கத்தில் நடந்த ஜீவர்களாதலால், கடவுள் விதித்த அருளாக்கினைப்படி, பசி தாகம் பயம் முதலியவற்றால் மிகவுந் துக்கப்படுகின்றார்களென்றறியவேண்டும். முன் தேகம் உண்டென்பது எப்படியென்னில்:—ஒரு வீட்டில் குடிக்கூலிகொடுத்துக் குடித்தனஞ்செய்ய வந்த ஸம்ஸாரி, அதற்கு முன் வேறொரு வீட்டில் குடிக்கூலிகொடுத்துக் குடித்தனம் செய்திருந்தானல்லது வீடில்லாமல் குடித்தனம் செய்யமாட்டானென்றும் இப்போது வந்த வீட்டிலும் கலகம்நேரிட்டால் பின்னும் வேறொரு வீட்டில் குடிபோவானென்றும் அறிவதுபோல், இந்தத்தேகத்தில் ஆகாரக் கூலிகொடுத்துக் குடியிருக்க வந்த ஜீவன், இதற்குமுன்னும் வேறொரு தேஹத்திலந்தக் கூலியைக்கொடுத்து ஜீவித்திருந்தானல்லது தேஹமில்லாமல் ஜீவித்திருக்கமாட்டானென்றும் இந்தத் தேகத்திலும் கலகம்நேரிட்டால் பின்னும் வேறொரு தேஹத்திற் குடிபோவானென்றும் துணியவேண்டும். ஆதலால், முன்னும் பின்னும் ஜீவர்களுக்குத் தேஹங்கள் நேரிடுமென்று அறியவேண்டும். ஜீவர்கள் முன் தேகத்தில் செய்த பாபகர்மங்கள் இந்தத் தேகத்திலும் வரும் என்பது எப்படியென்னில்:—ஒரு ஸம்ஸாரி முன் குடித்தனம் செய்திருந்த வீட்டில் தன்தலைவன் கட்டளைப்படி

நடவாமல், துன்மார்க்கர்களை வருவித்து அவர்களோடு கூடிப் பழகி இருந்தானானால், அந்த ஸம்ஸாரி அந்த வீட்டைவிட்டு வேறொரு வீட்டில் குடிவந்தகாலத்திலும் அந்தத் துன்மார்க்கர்கள் இந்த வீட்டிலும் வந்து இவனுடன் பழக்கஞ்செய்வார்கள்; அது போல், ஒரு ஜீவன் முன்குடியிருந்த தேகத்தில், கடவுள் கட்டளைப்படி நடவாமல், துன்மார்க்கத்தால் பாபகர்மங்களை விரும்பிச் செய்திருந்தானானால், அந்த ஜீவன் வேறொரு தேகத்தில் வந்த போதும், அந்தப் பாபகர்மங்கள் இப்போதுவந்த தேகத்திலும் வந்து அந்த ஜீவனைச் சேருமென்று அறியவேண்டும்.

முன்பிறப்பில் ஜீவகாருணியஒழுக்கத்தைவிட்டுத் துன்மார்க்கத்தில் நடந்த ஜீவர்களை, இந்தப்பிறப்பில் பசி தாகம் பயம் முதலியவற்றால் துக்கப்படச்செய்வது கடவுள் ஆக்கினை நியதியென்றால், அந்த ஜீவர்கள் விஷயத்தில் காருணியம் வைத்து ஆகாரம் முதலியவைகொடுத்து அவர்கள் துக்கத்தை மாற்றுவது கடவுள் ஆக்கினைக்கு விரோதமாகாதோ என்னில்:—ஆகாது. அரசன் தன்கட்டளைக்கு முழுதும் விரோதித்துக் கால்களுக்கு விலங்கிடப்பட்டுச் சிறைச்சாலையிலிருக்கின்ற பெரியகுற்றவாளிகளுக்கும் தன் சேவகர்களைக்கொண்டு ஆகாரங்கொடுப்பிக்கிறான். அதுபோல கடவுள் தன் கட்டளைக்கு முழுதும் விரோதித்துப் பலவகையால் பந்தஞ்செய்யப்பட்டு நரகத்திலிருக்கின்ற பாபிகளுக்கும் தன் பரிவாரதேவர்களைக்கொண்டு ஆகாரம் கொடுப்பிக்கின்றார். அரசன் கட்டளைப்படி நடவாமல் வேறுபட்ட சாதாரண குற்றமுடையவர்களைத் தன்னால் அவர்கள் பெறத்தக்க லாபத்தைப் பெறவொட்டாமல், உத்தியோகத்தினின்றும் நீக்கி, அவர்களுக்கு நல்லறிவு வருகின்றநிமித்தம் அவ்விடத்தை விட்டு வேறிடங்களில் வெளிப்படுத்துகின்றான். அவர்கள் உத்தியோகம் இழந்தபடியால், சுகபோஜனம் முதலிய போகங்களை இழந்து, ஊர்ப்புறங்களிற்போய் ஆகாரம் முதலியவைகுறித்து அலைந்து வருந்துகிறபோது, தயவுள்ளவர்கள் கண்டு ஆகாரம் முதலியவைகொடுக்கின்றார்கள். அதையரசன் கேட்டகாலத்திலும் கண்டகாலத்திலும் கொடுத்தவனை இரக்கமுள்ள நல்ல ஸம்சாரியென்று சந்தோஷித்து உபசரிக்கிறானேயல்லது கோபிக்க

வில்லை; அது போலவே கடவுள் தன் கட்டளைப்படி நடவாத சாதாரண குற்றமுடைய ஜீவர்களைத் தமது சக்தியால் அவர்கள் பெறத்தக்க சுகங்களைப் பெறவொட்டாமல் தான் கொடுத்த சௌக்ய புவன போகங்களை விடுவித்து, அந்த ஜீவர்களுக்கு நல்லறிவு வருவிக்கு நிமித்தம் அந்தத் தேகத்தில் நின்றும் நீக்கி, வேறொரு தேகத்தில் விடுவிக்கிறார். அந்த ஜீவர்கள் சௌக்ய புவனபோகங்களை இழந்த படியால், சௌக்கிய போஜனம் முதலியவற்றை யிழந்து வேறு வேறிடங்களில் ஆகாரம் முதலியவையில்லாமல் வருந்தும்போது, தயையுள்ளவர்கள் அந்த வருத்தத்தைக்கண்டு ஆகாரம் முதலியவை கொடுத்தால், அப்படிக் கொடுத்தவர்களை நல்ல இரக்கமுள்ளவர்கள் மேன்மேலும் சுகத்தையடையக் கடவர்களென்று சந்தோஷித்து உபசரிப்பாரல்லது கோபிக்கமாட்டார். ஆகையால், கடவுள் அருளாக்கினைக்கு ஜீவர்களிடத்து ஜீவர்கள் காருணியம் வைப்பதே ஸம்மதமென்று உண்மையாக அறியவேண்டும்.

இந்த ஜீவகாருணியத்தால் இகலோகவொழுக்கம் வழங்குகின்றது. ஜீவகாருணியமில்லையாகில் இகலோக வொழுக்கமெவ்வளவும் வழங்கமாட்டாதென்று அறியவேண்டும். எப்படியென்னில்.— ஜீவகாருணியம் இல்லாதபோது அறிவும் அன்பும் தோன்றாது; அவை தோன்றாதபோது கண்ணோட்டமும் ஒருமையும் உபகாரமும் விளங்காது; அவை விளங்காதபோது வலிய ஜீவர்களால் எளிய ஜீவர்களது ஒழுக்கம் முதலியவை தடைபட்டு அழிந்துபோம். பின்பு வலியவர்கள் ஒழுக்கங்களும் தாமஸவொழுக்கங்களாகி, ஒருவ னொழுக்கத்தால் மற்றொருவனொழுக்கம் மதத்திறைச் சோர் வடைந்து மாறுபட்டழிந்துபோம். ஜீவகாருணியவொழுக்கம் சிறிதுமில்லாத புலி சிங்கம் முதலிய மிருகங்கள் வழங்குகின்ற காட்டில் இகலோக ஒழுக்கம் வழங்கவேயில்லை; அதுபோல் ஜீவகாருணியமில்லாத மனிதர்கள் வழங்குமிடத்திலும் இகலோக ஒழுக்கம் வழங்கமாட்டாதென்று அறியவேண்டும்.

பரலோக ஒழுக்கமும் ஜீவகாருணியத்தால் வழங்குகின்றது. அதுவில்லையாகில், பரலோகவொழுக்கமும் வழங்கமாட்டாது. எப்படியென்னில்:—ஜீவகாருணிய மில்லாதபோது அருள் விளக்கம்

தோன்றாது; அது தோன்றாதபோது கடவுள் நிலை கைகூடாது; அது கூடாதபோது முத்தியின்பம் ஒருவரும் அடையமாட்டார்கள்; அடையாத பக்ஷத்தில் புலைகொலையொழுக்கம் வழங்கவேமாட்டாதென்று அறியவேண்டும். ஜீவகாருணியவொழுக்கம் மிகவும் வழங்காமையால் துன்மார்க்கப் பிறவிகளே பெருகி, எங்கும் புலைகொலையொழுக்கங்களை வழங்குகின்றனவாகும்; எப்படியெனில்:— ஜீவகாருணியமில்லாத கடினசித்தர்கள் எல்லாரும் அவரவர் கடினச்செய்கைக்குத் தக்கபடி சிலர் நரகவாசிகளாகவும், சிலர் க்ஷுத்ரவாசிகளாகவும், சிலர் புலி கரடி சிங்கம் யாளி யானை கடமை கடா பன்றி நாய் பூனை முதலிய துஷ்ட மிருகங்களாகவும், சிலர் பாம்பு தேள் முதலிய விஷஜந்துக்களாகவும், சிலர் முதலை சுறா முதலிய கடினஜந்துக்களாகவும், சிலர் காக்கை கழுகு முதலிய பக்ஷிசண்டாளங்களாகவும், சிலர் எட்டி கள்ளி முதலிய அசுத்த தாவரங்களாகவும் பிறந்திருக்கின்றார்கள்; ஆகலால் புலைகொலையொழுக்கங்களை மிகவும் வழங்குகின்றனவென்று அறியவேண்டும். ஜீவகாருணியம் கடவுளருளைப்பெறுவதற்கு முக்கியசாதனமென்பதுமல்லாமல், அதுவே அவ்வருளின் ஏகதேச விளக்கமென்றும் அறியவேண்டும்.

ஜீவகாருணியம் ஆன்மாக்களின் இயற்கை விளக்கமாதலால், அந்த இயற்கை விளக்கமில்லாத ஜீவர்களுக்குக் கடவுள் விளக்கம் அகத்திலும் புறத்திலும் வெளிப்படவேமாட்டாது. ஜீவகாருணியத்துக்கு முக்கியமான லக்ஷியம் எதுவென்னில்:— ஆன்மாக்களெல்லாம் இயற்கையுண்மை ஏகதேசங்களாயும் இயற்கை விளக்கமாகிய அருள் அறிவுக்கு அறிவாய் விளங்குதற்கு ஒற்றுமையுரிமை யிடங்களாயுமிருக்கின்றனவென்றும்; அந்த ஆன்மாக்கள் ஜீவர்களாகி யதிகரிப்பதற்குப் பூதகாரிய தேகங்களை உரிமையாக இருக்கின்றனவென்றும்; அந்தத்தேகங்களில் ஆன்மாக்கள் ஜீவர்களாகி அதிகரியாவிடில் ஆன்மவிளக்கம் மறைபடுமென்றும்; அதனால் அருள்விளக்கம் வெளிப்படாதென்றும்; அப்போது மூடமுண்டாகுமென்றும்; அதுவே ஆன்மாக்களுக்குப் பந்தமாகுமென்றும்; அதுபற்றி அவசியம் பூதகாரியதேகம் வேண்டுமென்றும்; பூதகாரியதேகங்களுக்கு மாயை முதற்காரணமாதலால், அந்த மாயையின் விகற்பஜாலங்களா

விய பசி தாகம் பிணி இச்சை எளிமை பயம் கொலை என்பவைகளால் அந்தத் தேகங்களுக்கு அடிக்கடி அபாயங்கள் நேரிடுமென்றும்; அப்படியபாயங்கள் நேரிடாமல் கரணேந்திரிய ஸகாயங்களைப் பெற்ற தம்மறிவைக்கொண்டு சர்வ ஜாக்கிரதையோடு முயற்சி செய்து தடுத்துக்கொள்வதற்குத் தக்க வல்லப சுதந்திரம் ஜீவர்களுக்கு அருளாற் கொடுக்கப்பட்டதென்றும்; அந்தச்சுதந்தரத்தைக் கொண்டு ஜீவர்களெல்லாம் தேகங்களிலிருந்து அபாயங்களை நீக்கி ஆன்மலாபத்தைப் பெறுதற்கு முயற்சிசெய்யக் கடவரென்றும்; ஊழ்வகையாலும் அஜாக்கிரதையாலும் பசி தாகம் பிணி இச்சை எளிமை பயம் கொலை என்பவைகளால் வரும் அபாயங்களை நிவர்த்தி செய்துகொள்ளமாட்டாமல் வருந்துகின்ற ஜீவர்கள் விஷயத்தில், அதை நிவர்த்தி செய்விக்கத்தக்க சுதந்தரமுள்ள ஜீவர்கள் காருணியத்தால் நிவர்த்தி செய்விக்கவேண்டுமென்றும்; அப்படி நிவர்த்தி செய்விப்பதில் பசியினால் வரும் துன்பமும் கொலையினால் வரும் துன்பமும் தவிர மற்றவைகளால் வரும் துக்கங்களை மாற்றுவது அபரஜீவகாருணியமாதலால், இவ்வுலக வின்பத்தைமாத்திரம் சிறிதுண்டுபண்ணுமென்றும்; பசியினால் வரும் துன்பத்தையும் கொலையினால்வரும் துன்பத்தையும் நிவர்த்தி செய்விப்பது பரஜீவகாருணியமாதலால், இவ்வுலகவின்பங்களையும் அளவிறந்த சித்தியின்பங்களையும் எக்காலத்தும் அழியாத முத்தியின்பத்தையும் அருளாலடையலாமென்றும்; ஊழ்வகையாலும் அஜாக்கிரதையாலும் அந்நிய ஜீவர்களுக்கு நேரிடுகிற அபாயங்களை நிவர்த்தி செய்விப்பதற்குத்தக்க சுதந்தரமும் அறிவுமிருந்தும், அவ்வாறு செய்யாமல் வஞ்சித்தவர்களுக்கு இவ்வுலகவின்பத்தோடு மோக்ஷவின்பத்தையு மநுபவிக்கின்ற சுதந்தரம் அருளாலடைப்படுவதில்லையென்றும்; தற்காலத்தில் அநுபவிக்கிற புவனபோக சுதந்தரம், அருளால் அடையப்படுவதில்லையென்றும்; தற்காலத்தில் அநுபவிக்கின்ற புவனபோகச் சுதந்தரங்களையும் இழந்துவிடுவரென்றும்; கடவுள் வேதத்தில் விதித்திருக்கின்றபடியால், ஊழ்வகையாலும் அஜாக்கிரதையாலும், பசி கொலை என்பவைகளால்வரும் அபாயங்களை நிவர்த்தி செய்துகொள்ளத்தக்க அறிவும் சுதந்தரமும் இல்லாத ஜீவர்

கள் விஷயத்தில், அவைகளை நிவர்த்திசெய்விக்கத்தக்க அறிவும் சுதந்தரமுமுள்ள ஜீவர்கள் வருந்தியபோதல், தயையினால், நிவர்த்திசெய்விப்பதே ஜீவகாருண்யத்திற்கு முக்கியமான லக்ஷிய மென்றும்; அதில் சத்தியமாக நம்பிக்கைவைத்து, பசித்த ஜீவர்களுக்கு ஆகாரத்தால் பசிநீக்கியும், கொலைப்படும் ஜீவர்களுக்குச் செய்வகையாற் கொலைநீக்கியும் திருப்தி இன்பத்தை உண்டுபண்ணுவதே மேலான பிரயோசனமென்றும் அறியவேண்டும்.

பசி, கொலை, பிணி, எளிமை, பயம் இச்சை என்பவைகளால் வரும் அபாயங்களை நிவர்த்திசெய்விப்பது விதியாக இருக்கவும், இவ்விடத்துப்பசியினாலும் கொலையினாலும்வரும் அபாயங்களைமாத்திரம் நிவர்த்திசெய்விப்பது விசேஷமென்று குறித்தது என்னென்றறியவேண்டில்:

ஜீவகாருண்ய வொழுக்கத்தில் அபர ஜீவகாருண்யமென்றும் பரஜீவகாருண்யமென்றும் இருவகையாம். அவற்றில் பசிநீக்கலுங் கொலைநீக்கலும் பரஜீவகாருண்ய மாதலால் விசேஷமாகக் குறிக்கப்பட்டதென்று அறியவேண்டும்.

அன்றியும், பசியினால் வருந்துகின்ற ஜீவர்களுக்குப் பசியை நிவர்த்திசெய்விக்கின்ற தயவுடையவர்கள் தாகம் நீக்குதற்குத் தண்ணீர் கொடாமலிரார்கள், தண்ணீர் கொடுப்பது பிரயாசமுமல்ல; தண்ணீர், ஏரி குளம் கால்வாய் முதலானவிடத்துமிருக்கின்றது. தாகத்தால், மாற்றிக்கொள்ளத்தக்க ஏகதேச அபாயம் நேரிடுமே யல்லது, அதனால் தேகத்துக்கு ஹானி நேரிடாது. பசியினாலோ மாற்றிக்கொள்ளக்கூடாத கெடுதி தேகத்திற்கு நேரிடும்.

பசியினால் வருந்துன்பத்தை நிவர்த்திசெய்விக்கத்தக்க தயையுடையவருக்குப் பிணியினால் வருந்துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதற்குத் தயையுண்டாகாமலிராது. பசிமிகுதியினாலேயே பிணிகள் விருத்தியாகின்றன. ஆகாரப் பக்குவங்களாலேயே அப்பிணிகள் நீங்குகின்றன. பிணிக்கு வேறு மருந்து கொடுப்பினும் பத்திய ஆகாரமே தேகம் நிற்பதற்கு அவசியமான ஆகாரமாயிருக்கின்றது. பிணியோடு நெடுநாள் தேகத்தை வைத்திருக்கக்கூடும். ஒருநாளாகினும் ஆகாரமில்லாமல் தேகத்தை வைத்திருக்கக்கூடாது.

பசித்தவர்களுக்கு ஆகாரத்தால் பசி நீக்குவிக்கின்ற தயையுடையவர்களுக்கு இச்சையாலடைந்த துன்பங்களை நீக்குவிப்பதற்குத் தயை வராமலிராது. ஜீவர்களுக்கு உள்ளபடி பசி நேரிடுமானால் ஆகாரத்திலல்லது மற்றொன்றிலும் இச்சை போகாது. ஆகாரங் கிடைக்கில் உண்டு பசி தீர்ந்தவர் தம் இச்சையைச் சிறிய முயற்சிகளால் முடித்துக்கொள்ளவுங் கூடும். இச்சையோடு பலநாள் தேகத்தை வைத்திருக்கலாம்; பசியோடு ஒருநாளும் வைத்திருக்கமுடியாது.

பசித்த ஜீவர்களுக்கு ஆகாரத்தால பசியை நிவர்த்திசெய்விக்கின்ற தயையுள்ளவருக்குத் தரித்திரமுற்ற ஜீவர்களது எளிமையை நீக்கத் தயை வராமலிராது. பசியால் வருந்துகின்ற எளிமைக்கு மேற்பட்ட எளிமையேயில்லை. எளிமையைச் சிலநாள்சென்று மாற்றிக்கொள்ளக் கூடும், பசியை அவ்வாறு மாற்றிக்கொள்ளக் கூடாது. எளிமையோடு தேகத்தை வைத்திருக்கக்கூடும்; பசியோடு வைத்திருக்க முடியாது.

பசியை நிவர்த்திசெய்விக்கின்ற தயையுடையவருக்குப் பயத்தை நிவர்த்திசெய்விப்பதில் தயைவராமலிராது. பசியினால் வரும்பயத்துக்குங் கொலையினால் வரும்பயத்துக்கும் மேற்பட்ட பயமேயில்லை. பயத்தை உபாயத்தால் நீக்கிக்கொள்ளக்கூடும், பசியை உபாயத்தால் நீக்கிக்கொள்ளக் கூடாது. பயத்தோடு தேகத்தை வைத்திருக்கலாம். பசியோடு வைத்திருக்கக் கூடாது.

பசியினால் வரும் அவஸ்தைகளும் துன்பங்களும், கொலையினால் வரும் அவஸ்தைகளும் துன்பங்களும் தம்முள் ஒத்திருக்கின்றனவாதலால், பசியினால் வரும் துன்பத்தையும் கொலையினால் வரும் துன்பத்தையும் நிவர்த்திசெய்விப்பதே ஜீவகாருண்யத்திற்கு முக்கிய லக்ஷியமென்று அறியவேண்டும்.

பசியினால் வரும் துன்பத்தை நீக்குதலும் கொலையினால் வரும் துன்பத்தை நீக்குதலும் ஜீவகாருண்யத்திற்கு முக்கிய லக்ஷியமாக விருக்கவும், இவ்விடத்தில் பசி நீக்குதலொன்றையே அடிக்கடி வலியுறுத்துவது என்னெனில்? ஒரு ஜீவன் பசியினால் கொல்லப்படு

மென்பதை அறிந்து காருணியத்தால் பசியை நீக்கி உயிர் பிழைக்கும்படிச் செய்பவர், வேறுவகையால் உயிர்க்கொலை நேரிட்டால் அதற்கிரங்கி அந்தக்கொலையால் வருந்துன்பத்தை நிவர்த்திசெய்யாமலிரார்கள். கொலையால் வருந்துன்பத்தை நிவர்த்தி செய்வியாதவர்கள் பசியால்வருந் துன்பத்தையும் நிவர்த்திசெய்விக்கத்தக்க தயையுடையவர்களாகார்கள். பசியால் வருங்கொலை ஆகாரத்தாலன்றி வேறுவகையால் நிவர்த்திசெய்விக்கப்படாது. பகை முதலியவற்றால் வருங்கொலையை அநேக உபாயங்களால் நிவர்த்தி செய்விக்கக்கூடும். ஆதலால், கொலையால் வருந்துன்பத்தை பசியால் வரும் துன்பத்தில் அமைத்து, அடிக்கடி வலியுறுத்துகின்றதென்று அறியவேண்டும்,

அன்றியும் தாகத்தால் வருந்துகின்றவரும், பிணியால் வருந்துகின்றவரும், எளிமையால் வருந்துகின்றவரும், பயத்தால் வருந்துகின்றவரும் பசிவருத்தமுண்டாகும்போது அவ்வருத்தங்களையெல்லாமறந்து பசிவருத்தமே மேற்பட்டு ஆகாரங்கொடுக்க முயற்சி செய்கின்றார்கள்.

அன்றி அரசனுக்கினையால், கொலைக்குற்றம்பற்றிக் கொலை செய்ய விதிக்கப்பட்ட குற்றவாளியும், பசிவந்தபோது தன்பயத்தையும் துன்பத்தையுமறந்து அந்தப்பசியை மாற்றிக்கொள்ளுகிறான்.

வயித்தியரால் தாம் இறந்துவிடுவது நிச்சயமென்று தெரிந்துகொண்ட வியாதியாளரும் மூப்பாளரும், பசிவந்தபோது தமது துன்பத்தை மறந்து பசிநீக்க முயலுகின்றார்கள்.

பசிக்குத் தயையினால் ஆகாரங்கொடுக்கத் துணிந்தவன் வேறு வகையால், ஜீவர்கள் ஹிம்சைப்பட்டு அழிவதற்குச் சம்மதிக்கவே மாட்டான். ஆதலால் பசியால் வருந்துன்பத்தை நிவர்த்திசெய்விக்கிறதருமத்தையே அடிக்கடி வலியுறுத்துவதென்றறியவேண்டும்.

பசியினால் வருங்கெடுதி எல்லா ஜீவர்களுக்குந் தேகநாசஞ் செய்வது உண்மையானால், எல்லாஜீவர்கள் பசியையும் அறிந்து

நிவர்த்திசெய்விக்க வேண்டும். அப்படி நிவர்த்தி செய்விக்கத் தொடங்கில், கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட தேவர் மனிதர் நரகர் மிருகம் பறவை ஊர்வன தாவரம் என்கிற இவ்வெழுவகைப்பட்ட அளவிறந்த ஜீவர்களது பசியைப்பறித்து நீக்குவது அசாத்திய மாகுமே என்னில்?

தேவர்கள் மனிதசரீரத்தினும் மேற்பட்ட சுதந்தரமுடைய வர்களாய்த் தங்களுக்கு நேரிட்ட பசியைத் தங்கள் முயற்சியி னாலேயே மாற்றிக்கொள்ளத்தக்க வல்லபமுடையவர்களாதலின், அவர்கள் பசியைக்குறித்து மற்றவர் யோசிப்பது அவசியமல்ல வென்றும்; தேவர்களுக்கும் பசிநேர்ந்தால் துன்பமுண்டாகுமே யென்று இரங்குவது மாத்திரம் அவசியமென்றும்; நரகர் நாம் பசி யாற்றுவிக்கத்தக்க இடங்களிலில்லாமல் வேறிடங்களிலிருக்கின்ற படியாலும், நரகர் பசிக்குத் தண்டனைப்பரிவாரங்களால் பசியாற்று வித்தலாலும், நரகர் பசியைக்குறித்து யோசிப்பது அவசியமல்ல வென்றும்; நரகரும் பசிநேரிடில் வருந்துவார்களேயென்று இரங்கு வதுமாத்திரம் அவசியமென்றும்; ஊழ்வகையினால் சிறிதுஞ் சுதந் தரமில்லாத மரம் புல் முதலிய தாவரங்களில் மனிதர் தங்கள் வாழ்க்கைக்குச் சகாயமாகத் தங்கள் முயற்சியால் விளைவிக்கின்ற தாவரவர்க்கங்களுக்குப் பசிகுறித்து நீர்விடுவது அவசியமென்றும்; மற்றைத்தாவரவர்க்கங்களெல்லாம் அருள் நியதியின்படி ஆகாரங் கொடுப்பிக்க வுயிர்த்திருக்கின்றவாதலாலும் அவைகளுக்கெல்லாம் பசியறிந்து ஆகாரங்கொடுப்பது நமது சுதந்தரமல்ல கடவுள் சுதந் தரமாதலால், அவை குறித்து யோசிப்பது அவசியமல்லவென்றும்; ஆகாரமில்லாவிடில் வருந்துமேயென்று இரங்குதல் மாத்திரம் அவசியமென்றும்; நிலத்திலும் நீரிலும் ஊருகின்ற உயிர்களுக்கும் பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் அவ்வவற்றின் ஊழ்வகைக்குத் தக்கபடி அருள் நியதி ஆகாரங்கொடுப்பிக்க உண்டு பசியாறுகின் றனவென்றும்; அவ்வவைகளுக்குத்தக்க ஆகாரம் அறிந்துகொடுப் பது நமது சுதந்தரமல்ல கடவுள் சுதந்தரமென்றும்; அவைகளில் மனிதர் வாழ்க்கைக்குச் சகாயமாகத் தங்கள் சுதந்தரத்தாற் சம் பாதித்துக் கொள்ளுகின்ற பசு எருது எருமை கடா ஆடு

ஞ்கிளை முதலிய சிலஜீவர்களுக்கு ஆகாரங்கொடுத்துப் பசியாற்று
தல் அவசியமென்றும் மனிதர்களில் ஆண்மனிதர் பெண்மனிதர்
என்றிருவகைப்பட்ட எல்லாமனிதர்களும் பசியினால் வருகிற கஷ்
டங்களும் துன்பங்களும் பசியினால் வருகிற பயங்களும்
இன்பங்களும் பொதுவாக அநுபவித்திருத்தலாலும், பசியால்
வருங்கஷ்டங்களையும் துன்பங்களையும் மனமுதலான அந்தக்கரண
விருத்தியினாலும் கண்முதலான இந்திரியங்களாலும், மிகவும்
அறிந்துகொள்ளுகின்ற ஆன்ம அறிவு விளங்கியிருத்தலாலும் மனிதர்
களுக்கு ஊழ்வகையினால் அருள் நியதியின்படிக் கொடுக்கின்ற
ஆகாரத்தைப் பெற்றுக்கொண்டு ஜீவித்துத் தேகத்தை வைத்திருக்கக்
கூடாமையாலும், தங்கள் முயற்சியாலும் அறிவாலும் சுதந்தரத்
தாலும் சம்பாதிக்கின்ற ஆகாரத்தாலும் பசியை நீக்கித்
தேகத்தை வைத்திருக்கவேண்டியதலாலும், ஆகாரத்தால் சம்
பாதிக்கின்ற ஜீவசுதந்தரம் மனிதர்களுக்கு அருளால் மிகவுங்
கொடுக்கப்பட்டபடியாலும், ஊழ்வகையால் ஆகாரம் கிடையாமல்
பசித்து வருந்தும்படியாகவும் அந்தப்பசியை நீக்கும்படி ஒரு
வரையொருவர் எதிர்பார்க்கும்படியாகவும், அவர் தயையினால் ஆகா
ரங்கொடுத்து அப்பசியை நீக்கி அவரை நன்முயற்சியிற் செலுத்த
வும் ஆகாரங்கொடுத்தவர் சித்திமுத்திகளை அடையவும் அருள்
நியதியாக விதிக்கப்பட்டபடியாலும், மனிததேகம் மற்ற ஜீவ
தேகம்போல் இலேசிலே எடுக்கக்கூடாததாலும், மனிததேகத்தில்
ஆன்மவிளக்கமும் அருள் விளக்கமும் மிகவும் விளங்குதலாலும்,
இந்த மனிததேகம்போனால் மீளவும் இந்தத்தேகம் வருமென்கிற
நிச்சயமில்லாமையாலும், இந்த மனிததேகம் முத்தி யின்பம்பெறுவ
தற்கே எடுத்ததேகமாதலாலும், இந்த மனிததேகமாத்திரமே முதற்
சிருஷ்டி தொடங்கிக் கடவுள் சம்மதத்தால் சிருஷ்டிக்கப்பட்ட
உயர்ந்த அறிவையுடைய தேகமாதலாலும், மனிதர்கள்மாத்திரம்
பசியாற்றுவிக்கின்ற ஜீவகாருண்ய விதியைப் பொதுவில் அவசியம்
உறுதியாகப் பிடிக்கவேண்டுமென்றும், கடவுள் விதித்திருக்கின்ற
படியால், பசியை ஆகாரத்தினால் நிவர்த்திசெய்விக்கின்ற சீவ
காருண்யவொழுக்கம் மனிதர்களிடத்தே பெரும்பான்மை நடத்தப்
படவேண்டுமென்று அறியவேண்டும்.

ஊழ்வினைக்குத்தக்கபடி மிருகம் பறவை முதலியஜீவர்களுக்கு அருளாய் விதியாகாரமாத்திரமிருக்க, மனிதர்களுக்கு மாத்திரம் ஊழ்விதி ஆகாரத்தோடு ஆகாமிய முயற்சியாகாரமும் வேண்டுவது அவசியமென்றது எப்படியெனில்:—

மனிதர்கள் பிராரப்தப்படி விதியாகாரத்தைப் புசித்துப் பிராரப்த அனுபவத்தை நீக்கிக்கொள்வதற்கும் ஆகாமியத்தால் முயற்சி ஆகாரத்தைப் புசித்துக் கரணேந்திரிய தேகத்தை வலியுள்ளதாகச் செய்துகொண்டு சன்மார்க்க சாதனத்தை அனுசரித்துச் சித்தி முத்தி இன்பங்களைப் பெறக்கடவதென்று கடவுள் விதித்திருக்கின்றபடியால், மனிதர்களுக்குப் பிராரப்த ஆகாரமும் ஆகாமிய முயற்சி ஆகாரமும் அவசியம் வேண்டுமென்றறியவேண்டும்.

மிருகம் பக்ஷி ஊர்வன தாவரம் என்கிற ஜீவதேகங்கள் தண்டனை பெறுதற்கு விதித்த தேகங்களாதலால், பிராரப்த ஆகாரம் கடவுள் விதித்தபடியே அருட்சத்தியால் தடைபடாமல் கொடுக்கப்படுகிறதாகலின் ஆகாமிய ஆகாரம் சம்பாதிக்க வேண்டாமென்று அறியவேண்டும்.

ஆனால் ஜீவகாருண்யம் எல்லாச்ஜீவர்களுக்கும் பொதுவென்று முதலில் குறிக்கப்பட்டதென்னையெனில்:—

ஜீவகாருண்யவொழுக்கத்தில் முக்கியமாக, எல்லா மனிதர்களுக்கும் பொதுவில், பசியினால் வருந்துன்பத்தை நிவர்த்திசெய்து ஆகாரத்தினால் திருப்தியின்பத்தை உண்டுபண்ண வேண்டுமென்றும், பசியைப்போல் வேறுவகையினால் ஜீவகொலை நேரிடுவதனால் அந்த ஜீவகொலையைத்தம்மாற் கூடியவரையில் எவ்விதத்தினாயினும் தடைசெய்து, உயிர்பெறுவித்துச் சந்தோஷிப்பிக்க வேண்டுமென்றும், பிணி பயம் முதலிய மற்ற ஏதுக்களால் ஜீவர்களுக்குத்துன்பம் நேரிடில் அத்துன்பங்கள் தங்களால் நீக்கத்தக்கவைகளாயில் நீக்கவேண்டுமென்றும், மிருகம் பறவை ஊர்வன தாவரம் முதலிய ஜீவர்களிடத்துப் பசியினால் வருந்துன்பத்தையும், கொலையினால் வருந்துன்பத்தையும் எவ்விதத்தும் நிவர்த்திசெய்யவேண்டுமென்

றும், அவற்றுள் அஷ்ட ஜீவர்களிடத்துச் சிறிது பயத்தினால் வருந் துன்பமாத்திரமேயல்லது கொலையினால் வருந்துன்பங்களைச் செய்யப்படாதென்றும், இங்ஙனம் முழுதுந் ஜீவகாருணியமே யாதலால், எல்லாவுயிர்களிடத்துந் ஜீவகாருணியம் வேண்டுமென்றும் கடவுளால் ஆஞ்ஞை செய்ததென்றறியவேண்டும்.

மனிதர்கள் தங்கள் வாழ்க்கைக்குச் சகாயமாகச் சம்பாதிக்கின்ற உயிர்களில், சிலவுயிர்கள் தாமச ஆகாரமாகிய மாமிச ஆகாரஞ் செய்வதனால் அவைகளுக்குப் பசியாற்றுவிக்கும்போது, அந்த ஆகாரத்தைக் கொடுத்து ஆற்றுவிக்கப்படாதோ, வெனில்:—

ஒரு ஜீவனைக்கொன்று ஒரு ஜீவனுக்கு மாமிசத்தால் பசியாற்றுதல் ஜீவகாருணிய வொழுக்கமே யல்லவென்றும், கடவுள் சம்மதமுமல்லவென்றும், இவைக்கு முழு விரோதமென்றும் அறியவேண்டும். எல்லா ஜீவர்களும் இயற்கை உண்மை ஏகதேசங்களாகி, கடவுள் இயற்கை விளக்கமாகிய அருளுக்கு இடமாக இருக்கின்றபடியாலும், கடவுள் இயற்கை விளக்கம் மறைபடும்போது ஜீவத்தன்மை யில்லாதபடியினாலும், ஜீவன் இயற்கை விளக்கமும் ஒன்றோடொன்று மாறுபடாதாதலாலும், கடவுள் இயற்கை விளக்கமும் அந்தந்த தேகங்களினும் விளங்குகின்றபடியாலும், ஒரு ஜீவனை வதைத்து அதனால் மற்றொரு ஜீவனுக்குப் பசியாற்றுதல் ஜீவகாருணிய வொழுக்கத்துக்கு முழு விரோதமென்றே அறியவேண்டும்.

புலி சிங்கம் முதலிய மிருகங்கள் மற்றொரு ஜீவனைக்கொன்று தின்று தாமச ஆகாரத்தால் பசியாற்றித் திருப்தி யின்பத்தை யடைந்து சந்தோஷிக்கின்றன. அச்சந்தோஷம் கடவுள் இயற்கை விளக்க ஏகதேசமும், ஜீவன் இயற்கை விளக்க நிலையுமென்று கொள்ளக்கூடாதோ வெனில்:—

கூடாது. தாமச ஆகாரத்தால் பூரண சத்துவமாகிய கடவுள் இயற்கை விளக்க ஏகதேசமும், ஏகதேச சத்துவமாகிய ஆன்ம இயற்கைவிளக்கமும் விளங்காது; இருளால் ஒளி விளங்காதது

இதைத் தாமச ஆகாரமென்பது என்னையெனில்?

கடவுள் விளக்கம் வெளிப்படாதபடி ஆன்மவிளக்கத்தை மறைத்த இம்சையாகாரமாதலால், தாமச ஆகாரமாயிற்று.

இந்த ஆகாரத்தால்வந்த திருப்தியின்பமாகிய சந்தோஷ விளக்கம் எதனுடைய விளக்கமென்னில்?

அசுத்தபசுகாரணமாயாவிளக்கமென்றறியவேண்டும்.

பசுவென்பது என்னை?

ஆணவம், மாயை, கன்மம் என்கிற மும்மல பந்தத்தால் தொன்றுபட்டு அறிவிழந்த ஆன்மாவையே பசு என்பது.

அப்பசுவிற்கு விளக்கம் தோன்றுவது எப்படி என்னில்?

சூரியனை மறைத்த மேக வண்ணத்திலுள்ள இருளினிடத்தும், சூரியப்பிரகாச விசேஷம் தோன்றுமாதலால், அவ்விருளும் விளக்கமாக வழங்குகின்றது. அதுபோல் அசுத்தமாயாகாரணங்களும் தாமசகுணமும் இருள் வண்ணமுடையவாயினும்; தம்மால்மறைக்கப்பட்ட பரஜீவவிளக்க விசேஷத்தால், அசுத்தமாயகாரணமும் தாமசகுணமும் விளக்கமாக வழங்குகின்றன. இதனால் தாமச ஆகாரத்தில் வரும் விளக்கம் அசுத்தமாயாகாரண விளக்கமேயென்றறியவேண்டும்.

ஆனால், மரம், புல், நெல், முதலான தாவரங்களும், உயிராகவே சொல்லப்படுகின்றனவே, அவைகளை இம்சை செய்து ஆகாரமாகக்கொண்டால் அவை தாமச ஆகாரமல்லவோ, அதனால் வந்த சந்தோஷம் அசுத்தமாயாகாரண சந்தோஷமல்லவோ, எனனில்?

மரம், புல், நெல் முதலான தாவரங்களும், உயிர்கள்தான். அவைகளை இம்சை செய்து ஆகாரங்கொண்டால், அது ஏகதேச தாமச ஆகாரந்தான். அந்த ஆகாரத்தால் வந்த தோஷமும் அசுத்தகாரண சந்தோஷந்தான். ஆனால் அப்படியல்ல.

மரம், புல், நெல் முதலான ஜீவர்கள் பரிசமென்கிற வோரறிவையுடைய சீவர்கள் ஆதலாலும் அவ்வுடம்பில் சீவவிளக்கம் ஒரு சார் விளங்குதலாலும், அவ்வுயிர்கள் தோன்றும் வித்துக்களும், மற்ற வித்துக்கள் போல் சடமாதலாலும், அவ்வித்துக்களை நாமே விதைத்து உயிர்விளைவு செய்யக்கூடுமாதலாலும், அவ்வுயிர்களை வேறுசெய்யாமல் அவ்வுயிர்களினிடத்து உயிரில்லாமல் உயிர்தோன்றுதற்கிடமான சடங்களாகத் தோன்றிய வித்துக்களையுங் காய்களையுங், கனிகளையும், பூக்களையுங், கிழங்குகளையும், தழைகளையும் ஆகாரங்களாகக் கொள்வதேயன்றி, அவ்வுயிருள்ள முதல்களை ஆகாரமாகக் கொள்ளாதபடியாலும், அவைகளில் வித்து, காய், கனி முதலானவைகளைக் கொள்ளும்போது சுக்கிலம் நகம் ரோமம் முதலியவைகளை வாங்கும்போது இம்சை யுண்டாகாமைபோல் இம்சையுண்டாகாதபடியாலும், தாபர வர்க்கங்களுக்கு மனமுதலான அந்தக்கரணங்கள் விருத்தியில்லாதபடியாலும், அது உயிர்க்கொலையுமல்ல துன்பமுண்டுபண்ணுவதுமல்ல. அதனால் அது ஜீவகாருண்ய விரோதமாகாது அந்த ஆகாரத்தால் வந்த சந்தோஷமும் சீவவிளக்க சகிதமான கடவுள் விளக்கமேயாகுமென் றறியவேண்டும்.

மர முதலிய தாபரங்களில் தோன்றிய வித்துக்களை இனி உயிரேறுதற்கிடமாகிய சடங்களென்பது எப்படி என்னில்?

வித்துக்களில் ஜீவன் இருந்தால் நிலத்தில் விதையாமுன்னமே விளையவேண்டும். நிலத்தில் விதைத்தகாலத்தும் சில வித்துக்கள் விளையாமலே இருக்கின்றன. அன்றியும் வித்தென்பது காரணம். இந்தக்காரணம் உடம்பு தோன்றுதற்கேயென்று சிறுபிள்ளைகளாலும் அறியப்படும். அன்றி உயிர் நித்தியம், உடம்பு அநித்தியம். நித்தியமான உயிர்க்காரணம் வேண்டாது. அநித்தியமாகிய உடம்பே காரணம்வேண்டும். ஆகலின், வித்துக்களைச் சடமென்றறியவேண்டும்.

ஆனால் வித்துக்களிடத்து ஆன்மாக்கள் வருவது எப்படி என்னில்?

நிலத்திற் கலந்தவித்துக்கு நீர்விடில், அந்நீரின்வழியாகக் கடவுள் அருள் நியதிப்படி ஆன்மாக்கள் அணுத்தேகத்தோடு கூடி நிலத்திற்சென்று, அந்நிலத்தின் பக்குவ சத்தியோடு கலந்து வித்துக்களினிடமாகச் செல்கின்றனவென்றறியவேண்டும்.

முளைகளைப் பிடுங்கப்படாதென்று, சிலர் சொல்லுகின்றார்கள், வித்து, காய், இலை முதலியவைகளைப் புசிக்கலாமென்று சொல்வதெப்படி என்னில்?

வித்து நிலத்திற்படிந்தபின் நீர்வழியாக ஆன்மாவானது சென்று பக்குவ சத்தியிற் கலந்து வித்திலேறி முளைத்தபடியால், முளையானது வித்து காய் முதலியவைகளைப்போல் சடமல்ல. ஆதலால் முளைகளைப் பிடுங்கப்படாதென்பது உண்மையென்றறியவேண்டும்.

வித்து, காய், கனி, முதலியவற்றில் உயிர்க்கொலை இல்லாவிடினும் நகம், ரோமம், சுக்கில முதலியவற்றிலிருக்கிற அசுத்தமாவது இல்லையோவென்னில்?

தத்துவ விருத்தியும் தாதுவிருத்தியுமில்லாதபடியால் அசுத்தமுமில்லை. ஆதலின் மரம், புல், நெல் முதலியவைகளின் வித்து, காய் கனி தழை முதலியவற்றைப் புசிப்பது, ஜீவகாருண்ய விரோதமல்லவென்றறியவேண்டும்.

மாமிச ஆகாரம் புலி முதலாகிய துஷ்ட மிருகங்களுக்கு நியதியாகாரமல்லவோவென்றறியவேண்டில்?

அது அவ்வுயிர்களுக்குச் சிருட்டி நியதி ஆகாரமல்ல. பரம்பரை வழக்கத்தாற்பெற்ற ஆகாரமாமென்றறியவேண்டும். ஆதலின் அதை நிவர்த்திசெய்வித்துச் சுத்த ஆகாரங்களைப் புசிப்பிக்கும்படிச் செய்யவுங்கூடும். ஒரு சீலமுடையவன் கிரகத்தில் வழங்குகின்ற பூனைக்கும், நாய்க்கும், வேறிடங்களிற்போய் அசுத்த ஆகாரங்கொள்ளாமற் காவல்செய்து, அதுநாள் தொடங்கிச் சுத்த ஆகாரவழக்கமே செய்விக்கின்றான். அவைகள் அவைகளைப்புசித்து உயிர்வழங்கிவருகின்றன. அப்படியே புலி, சிங்க முதலிய துட்ட

வர்க்கங்களையும், மேல்நின்று சுத்தாகாரத்தில் பழக்குவாரில்லாமையால், அசுத்தாகாரங்களைப் பழக்கத்தால் புசிக்கின்றன வென்றறியலாம். ஆதலில் ஒரு ஜீவனைக்கொன்று மற்றொருஜீவனுக்குப் பசியாற்றுவித்தல், கடவுள் அருளுக்குச் சம்மதமுமல்ல, ஜீவகாருண்ய வொழுக்கமு மல்லவென்று சத்தியமாக அறியவேண்டும்.

இந்த ஜீவகாருண்ய மென்கிற சாதனத்தில் சாத்தியமாகின்ற இன்பம், அபர இன்பமென்றும், பரவின்ப மென்றும், இருவகைப்படும். இச்சை முதலியவைகளைப்பற்றி யுண்டாகின்ற துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வரும் இன்பம் அபரவின்பமாகும். அவை இம்மையில் அநுபவிக்கின்ற இன்பங்களில் சில வென்றறிய வேண்டும். அவை யெவை யென்னில்?

உடுப்பதற்கு வஸ்திரமில்லாமலும், இருப்பதற்கு இடமில்லாமலும், உழுவதற்கு நிலமில்லாமலும், பொருந்துவதற்கு மனைவியில்லாமலும், விரும்பியபடிச் செய்வதற்குப் பொருள் முதலிய வேறு வேறு கருவிகளில்லாமலுந் துன்பப்படுகின்ற ஜீவர்கள் விஷயத்தில், ஜீவகாருண்யந்தோன்றி, உடுப்பதற்குவஸ்திரம், இருப்பதற்குஇடம், உழுவதற்கு நிலம், பொருந்துவதற்குப் பெண், விரும்பியபடிச்செய்வதற்குப் பொருள் முதலானவை கொடுத்தபோது, பெற்றுக்கொண்டவர்களுக்கு உள்ளிருந்து முகத்தினிடமாகத் தோன்றுகின்ற இன்பவிளக்கமும், அந்த இன்பத்தைக் கண்டுகொடுத்தவர்களுக் குண்டாகின்ற இன்பவிளக்கமும், கடவுள் காரணத்தில் ஏகதேசமும், ஜீவகாரணத்திற் பூரணமுமாகத் தோன்றுகின்றவை யாகலால், அபரவின்ப மென்றறியவேண்டும்.

அன்றி, தன்வத்திரம் தாழ்ந்ததாகவும், அன்னியன்வத்திரம் உயர்ந்ததாகவும் கண்டு அதில் ஆசைவைத்து வருந்துகின்ற வருத்தமுங்கண்டால், காருண்யம் வேண்டாவோ வென்னில்?

பசியினால் வருந்துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வரும் இன்பம் பரவின்பமாகும். அவைஇம்மையில் போகசித்திகளாலும், யோகசித்திகளாலும், ஞானசித்திகளாலும் வருகின்ற இன்ப

ங்களும், முடிவில் அனுபவிக்கப்படும் மோக்ஷ இன்பமுமாகுமென்று அறியவேண்டும்.

உண்பதற்கு ஆகாரமில்லாமல் சோர்வடைந்த ஜீவர்களுக்குச் ஜீவகாருண்யத்தால் ஆகாரங்கொடுக்க உண்டு பசி நீங்கிய தருணத்தில் அந்த ஜீவர்களுக்கு அகத்தினிடத்தும், முகத்தினிடத்தும், தழைந்து பிரகாசிக்கின்ற இன்பமும். அது கண்டபோது கொடுத்தவர்களுக்கு அகத்திலும், முகத்திலும், அவ்வாறுண்டாகின்ற இன்பமும், ஆன்மசந்தமாகிய கடவுள் சரணத்திற் பூரணமாகத் தோன்றுகின்றவையாகலால், பரவின்பமென்றே தெரிந்து அறியவேண்டும்.

வஸ்திரம், இடம், நிலம், பெண், பொருள் முதலானவைகளில்லாமல் துன்பப்படுகின்றவர்கள், அத்துன்பங்களை மனவெழுச்சியால் சகித்துக்கொண்டு, உயிர்தரித்து தங்களாற் செய்யக்கூடிய முயற்சியைச் செய்யக்கூடும். பசியினால் துன்பம் நேரிட்டபோது மனவெழுச்சியால் அத்துன்பத்தைச் சகித்துக்கொள்ளக் கூடாது. சகிக்கத்தொடங்கில் உயிரிழந்து விடுவார்கள். பசி நேரிட்டபோது, பெற்றவர்கள் பிள்ளைகளை விற்றும், பிள்ளைகள் பெற்றவர்களை விற்றும், மனைவியை புருஷன் விற்றும் புருஷனை மனைவி விற்றும், அந்தப் பசியினால் வருந்துன்பத்தை மாற்றிக்கொள்ளத் துணிவார்கள் என்றால், அன்னியமாகிய வீடு, மாடு, நிலம், உடைமை முதலியவைகளை விற்றுப் பசியை நீக்கிக் கொள்வார்களென்பது சொல்லவேண்டுவதில்லை.

உலகமுழுதும் ஆளுகின்ற சக்கிரவர்த்தியாகிய அரசனும் பசி நேரிட்டபோது, தனது அதிகாரவுயர்ச்சி முழுதும் விட்டுத் தாழ்ந்த வார்த்தைகளாற் பசி நேரிட்டது என்ன செய்வதென்று அருகிலிருக்கின்ற அமைச்சர்களிடத்துக் குறை சொல்லுகின்றான். பகைவரால் எறியப்பட்டு மார்பிலுருவிய பாணத்தையுங் கையாற் பிடித்துக்கொண்டு, எதிரிட்ட பகைவரையெல்லாம் அஞ்சாது ஒரு நிமிஷத்தில் வெல்லத்தக்க சுத்தவீரரும், பசி நேரிட்டபோது சவுரியத்தை யிழந்து பசிக்கஞ்சிப் பக்கத்தினின்றவரைப்பார்த்து இளைப்பு

வருமே! சண்டை யெப்படிச் செய்வதென்று முறையிடுகின்றார்கள். இவ்வுலக போகங்களோடு இந்திரபோகமுதலிய போகங்களையுந் துரும்பாகவெறுத்து, முற்றுந்துறந்து, அறிவையறிந்து, அநுபவம் விளங்கிய ஞானிகளும்; இந்திரியங்களை யடக்கி மனோலயஞ்செய்து உண்மை கிட்டியிருக்கின்ற யோகிகளும்; இறந்தோரையும் எழுப்பத்தக்க அளவிறந்த மகத்துவங்கள் விளங்கிய சித்தர்களும் முனிவர்களும்; தபசிகளும்; பசி நேரிட்டபோது, தங்கள் தங்கள் அநுபவலக்ஷியங்களை விட்டு, அந்நிய ஊரை நோக்கிப் பலிக்கு வருகின்றார்கள். பசி நேராகபோது நிலை கலங்குகின்றார்கள். சொப்பனத்தில் ஓரிழிவுவரினும் அதுகுறித்து உயிர்விடத்தக்கமானிகளும் பசிநேரிட்டபோது, சொல்லத்தகாதவரிடத்தும் சொல்லி மானங்குலைகின்றார்கள். சாதிசமய ஆசாரங்களில் அழுத்தமுடைய ஆசாரியர்களும், பசி வந்தபோது ஆசாரத்தை மறந்து, ஆகாரத்திற் கெதிர்பார்க்கின்றார்கள். கல்விகேள்விகளில் நிரம்பி, அறிதற்கரிய நுட்பங்களையறிந்து, செய்தற்கரிய செய்கைகளைச் செய்து முடிக்க வல்லவர்களும், பசி நேரிட்டபோது அறிவும் கருத்தும் அழிந்து தடுமாறுகின்றார்கள். இராப்பகல் தோன்றாது புணர்ச்சியின்பத்திற் பொங்குகின்ற காமிகளும், பசி நேரிட்டபோது புணர்ச்சியைமறந்து காமத்தைக்கசந்து கலங்குகின்றார்கள். நாமேபெரியர், நமக்குமேற் பெரியரில்லை யென்று இறுமாப்படைகின்ற அகங்காரிகளும், பசிநேரிட்டபோது அகங்காரங்குலைந்து, ஆகாரங் கொடுப்பவரைப் பெரியவராகப் புகழ்கின்றார்கள். ஒருவகைக் காரியங்களில் அநேகவகைகளாக உபசரிக்கச் செய்கின்ற டம்பர்களும், பசிநேரிட்டபோது டம்பத்தையிழந்து மயங்குகின்றார்கள். இவர் இவர் இப்படியிப்படியானால், ஒரு வகை ஆதாரமுமில்லாத ஏழைகள், பசி நேரிட்டபோது என்ன பாடுபடார்கள். அந்தக்காலத்தில் அந்த ஏழைகளுக்கு ஆகாரங்கிடைத்தால் எப்படிப்பட்ட சந்தோஷமுண்டாகும் அந்தச் சந்தோஷத்தைத் தோற்றுவித்தவர்களுக்கு எப்படிப்பட்ட லாபங்கிடைக்கும். இப்படிப்பட்டதென்று சொல்லுதற்கு அருமையென்று அறியவேண்டும்.

ஜீவர்களுக்குப் பசி யதிகரிக்குங்காலத்தில், ஜீவ அறிவு விளக்கமில்லாமல் மயங்குகின்றது. அது மயங்கவே அறிவுக்கறிவாகிய கடவுள் விளக்கம் மறைபடுகின்றது. அது மறையவே புருடதத்துவஞ் சோர்ந்து விடுகின்றது. அது சோரவே பிரகிருதி தத்துவம் மழுங்குகின்றது. அது மழுங்கவே குணங்களெல்லாம் பேதப்படுகின்றன. மனசு தடுமாறிச் சிதறுகின்றது. புத்தி கெடுகின்றது. சித்தம் கலங்குகின்றது. அகங்காரம் அழிகின்றது. பிராணன் சுழல்கின்றது. பூதங்களெல்லாம் புழுங்குகின்றன. வாதபித்தசிலேட்டுமங்கள் நிலைமாறுகின்றன. கண் பஞ்சடைந்து குழிந்துபோகின்றது. காது கும்மென்று செவிடுபடுகின்றது. நா உலர்ந்து வறளுகின்றது. நாசி குழைந்து அழல்கின்றது. தோல்மெலிந்து ஸ்மரணை கெடுகின்றது. கை கால் சோர்ந்து துவளுகின்றன. வாக்குத்தொனி மாறிக்குளறுகின்றது. பற்கள் தளர்கின்றன. மலசலவழி வெதும்புகின்றது. மேனி கருகுகின்றது. உரோமம் வெறிக்கின்றது. நரம்புகள் குழைந்து நைகின்றன. நாடிகள் கட்டுவிட்டுக் குழைகின்றன. எலும்புகள் கருகிப் பூட்டுகள் நெக்குவிடுகின்றன. இருதயம் வேகின்றது. மூளை சுருங்குகின்றது. சுக்கிலம் வெதும்பி வற்றுகின்றது. ஈரல் கரைகின்றது. இரத்தமும் சலமும் சுவறுகின்றன. மாம்சம் குழைந்து தன்மை கெடுகின்றது. வயிறு பகீலென்றெரிகின்றது தாபசோபங்கள் மேன்மேலு முண்டாகின்றன. உயிரிழந்து விடுவதற்கு மிகவும் சமீபித்த அடையாளங்களும், அனுபவங்களும் தோன்றுவன, ஜீவர்களுக்கெல்லாம் பொதுவாகவே இருக்கின்றன. இவ்வளவு அவத்தைகளும், ஆகாரம் கிடைத்தபோது உண்டு பசிநீங்க நீங்குகின்றன. அப்போது தத்துவங்களெல்லாம் தழைத்து, உள்ளங்குளிர்ந்து, அறிவு விளங்கி, அகத்திலும் முகத்திலும் ஜீவகளையும் கடவுள் களையும் துளும்பி, ஒப்பில்லாத திருப்தி இன்பமுண்டாகின்றது. இப்படிப்பட்ட இன்பத்தை உண்டுபண்ணுகின்ற புண்ணியத்துக்கு, எந்தப்புண்ணியத்தை இணையென்று சொல்லலாம். இந்தப்புண்ணியத்தைச் செய்கின்ற புண்ணியர்களை, எந்தத்தெய்வத்துக்குச் சரியென்று சொல்லலாம். எல்லாத்தெய்வங்களுக்கும் மேலாகிய கடவுள் அம்சமென்றே சத்தியமாக அறியவேண்டும்.

இதனால் நரகவேதனை, சனனவேதனை, மரணவேதனை யென்கிற மூன்று வேதனைகளுங் கூடி முடிந்த வேதனையே, பசிவேதனை யென்றும். அகம், புறம், நடு, கீழ், மேல், பக்கம் என்கிற எவ்விடத்தும் நிறைந்து, எக்காலத்தும் நீங்காத மோக்ஷ இன்பமே ஆகாரத்தினாலுண்டாகும் திருப்தி இன்பமென்றும் அறியப்படும்.

பசியில்லாவிடில், ஜீவர்கள் ஆகாரங்குறித்து ஒருவரையொருவர் எதிர்பார்க்கமாட்டார்கள். எதிர்பாராதபக்ஷத்தில், உபகாரச் செய்கை தோன்றாது. அது தோன்றாதபோது ஜீவகாருண்யம் விளங்காது. அது விளங்காதபோது கடவுள் அருள் கிடைக்கமாட்டாது. ஆதலால் பசியும் கடவுளால் கொடுக்கப்பட்ட ஒரு உபகாரக்கருவியென்றே அறியவேண்டும்.

பசியினால் துன்பப்படுகின்றவர்கள், ஆகாரத்தைக்கண்ட காலத்தில் அடைகின்ற சந்தோஷமும், தாய், பிதா, பெண்டு, பிள்ளை, காணி, பூமி, பொன், மணி, முதலானவைகளைக் கண்டகாலத்திலும் அடையார்கள். ஆதலின், ஆகாரம் உண்டகாலத்தில் உண்டாகும் சந்தோஷம் எப்படிப்பட்டதாக விருக்கும்? ஆதலால் இந்த ஆகாரத்தின் சொரூபரூபசுபாவங்களும், கடவுள் அருளின் ஏகதேச சொரூபரூபசுபாவங்களாகவே அறியவேண்டும்.

பசியென்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றியெரிகின்றபோது, ஆகாரத்தால் அவிக்கின்றது தான் ஜீவகாருண்யம்.

பசியென்கிற விஷக்காற்றானது ஏழைகள் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில், ஆகாரங்கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே ஜீவகாருண்யம்.

கடவுள் இயற்கை விளக்கத்திற் கிடமாகிய ஜீவதேகங்கள் என்கிற ஆலயங்கள், பசியினால் பாழாகுந்தருணத்தில் ஆகாரம் கொடுத்து, அவ்வாலயங்களை விளக்கஞ் செய்விப்பதே ஜீவகாருண்யம்.

கடவுளின்பத்தைப் பெறுகின்ற நிமித்தம் தேகங்களிலிருந்து குடித்தனஞ் செய்கின்ற ஜீவரது தத்துவக்குடும்ப முழுதும், பசியினால் நிலைகெடுமாறி அழியுந்தருணத்தில், ஆகாரம் கொடுத்து அக்குடும்ப முழுதும் நிலைபெறச் செய்வதே ஜீவகாருண்யம்.

பசியென்கிற புலியானது, ஏழை உயிர்களைப்பாய்ந்து கொல்லத்தொடங்கும் தருணத்தில், அப்புலியைக்கொன்று அவ்வுயிரை ரக்ஷிப்பதே ஜீவகாருண்யம்.

பசியென்கிற விஷம், தலைக்கேறி ஜீவர் மயங்கும் தருணத்தில், ஆகாரந்தால் அவ்விஷத்தை இறக்கி மயக்கந்தெளியச் செய்வதே ஜீவகாருண்யம்.

பசியென்கிற கொடுமையாகிய தேள், வயிற்றிற் புகுந்து கொட்டுகின்றபோது, கடுப்பேறிக்கலங்குகின்ற ஏழைகளுக்கு ஆகாரத்தால் அக்கடுப்பை மாற்றிக் கலக்கத்தைத் தீர்ப்பதே ஜீவகாருண்யம்.

நேற்று இராப்பகல் முழுதும் நம்மை அரைப்பங்கு கொன்று தின்ற பசியென்கிற பாவி, இன்றும் வருமே, இதற்கென்ன செய்வோமென்று ஏக்கங்கொள்கின்ற ஏழை ஜீவர்களது ஏக்கத்தைத் தீர்க்குவதுதான் ஜீவகாருண்யம்.

வெய்யிலேறிப்போகின்றதே, இனி பசியென்கிறவேதனை வந்து சம்பவிக்குமே, இந்த விதியசத்திற் கென்ன செய்வதென்று தீனில் விழுந்த ஈபைப்போல் திகைக்கின்ற ஏழை ஜீவர்களுடைய திகைப்பை நீக்குவதுதான் ஜீவகாருண்யம்.

இருட்டிப்போகின்றதே, இனி ஆகாரங்குறித்து எங்கே போவோம், யாரைக்கேட்போம், என்ன செய்வோமென்று விசாரத்திலழுந்திய ஏழை ஜீவர்களது விசாரத்தை மாற்றுவதே ஜீவகாருண்யம்.

நடந்து நடந்து காலுஞ் சோர்ந்தது, கேட்டுக்கேட்டு வாயுஞ் சோர்ந்தது, நினைத்து நினைத்து மனமுஞ் சோர்ந்தது, இனி இப்பாவி வயிற்றுக் கென்னசெய்வோமென்று கண்ணீர் வடிக்கின்ற ஏழைகளுக்கு, ஆகாரங்கொடுத்துக் கண்ணீரை மாற்றுவதே ஜீவகாருண்யம்.

பகற்போதும் போய்விட்டது, பசியும் வருத்துகின்றது, வேறிடங்களிற் போக வெட்கந்தடுக்கின்றது, வாய்திறந்து கேட்க மானம் வலிக்கின்றது, வயிறு எரிகின்றது, உயிரைவிடுவதற்கும் உபாயம் தெரியவில்லை, இவ்வுடம்பையேன் எடுத்தோமென்று மன

ஏழ முகமுஞ் சோர்ந்து சொல்வதற்கு நாவெழாமல் உற்பாத சொப்பனங்கண்ட ஊமையைப்போல் மனமறுகுகின்ற மானிகளாகிய சீவர்களுக்கு, ஆகாரங்கொடுத்து மானத்தைக் காப்பாற்றுவதே ஜீவகாருண்யம்.

நான் முன்பிறப்பில் பசித்தவர்கள் பசிக்குறிப்பறிந்து பசியை நீக்கியிருந்தால், இப்பிறப்பில் நமதுபசிக்குறிப்பறிந்து பசியை நீக்குவதற்குப் பிறிதொருவர் நேர்வார், அப்போது அப்படி நாம் செய்ததில்லை, இப்போது நமக்கிப்படிச்செய்வாருமில்லையென்று விவகரித்துக்கொண்டு, தூக்கம்பிடியாமல் துக்கப்படுகின்றஏழைச்சீவர்களுக்கு, ஆகாரங்கொடுத்துத் துக்கத்தை நீக்கித்தூக்கம் பிடிக்கவைப்பதே ஜீவகாருண்யம்.

தேகமுழுதுங் காம்புகள் தோன்றப்பசியினால் இளைத்து உயிர் ஒடுங்கி மூர்ச்சை முடியுங்காலத்தும், அயலாரைக்கேட்பது துணியாமல், கடவுளை நினைத்து நினைத்து, நெருப்பிற் படுத்து நித்திரை செய்யத் தொடங்குவாரைப்போல, அடிவயிற்றில் கொடிய பசி நெருப்பைவைத்துப் படுக்கத் தொடங்குகின்ற விவேகிகளுக்கு ஆகாரங்கொடுத்து அந்தப்பசி நெருப்பை ஆற்றுவதே ஜீவகாருண்யம்.

நேற்றுப் பட்டினிகிடந்ததுபோல் இன்றும் பட்டினிகிடப்பது எப்படி? நாம் பாவியசைத்தால் இன்றும் பட்டினிகிடக்கத் துணிவோமாயினும், பட்டினி சகியாத நமது ஏழை மனைவியாருக்கு யாதுசெய்வோம். இவள் பசியைக்குறிப்பதும் பெரிதல்ல. வார்த்திகதிசையால் மிகவுஞ் சோர்ந்த நமது தாய்தந்தைகள் இன்றும் பட்டினிகிடந்தால் இறந்து விடுவார்களே, இதற்கென்னசெய்வோம் பசியினால் அழுதழுதுகளைத்த நமது புத்திரர்களது சோர்ந்த முகத்தை எப்படிப்பார்ப்போம் என்று எண்ணி எண்ணி, கொல்லன் உலையிலூதலுண்ட நெருப்பைப்போல, பசிநெருப்பும் பயநெருப்பும், விசாரநெருப்பும், உள்ளேமூண்டபடியிருக்க, கன்னப்புடையில் கைகளை வைத்துக்கொண்டு கண்களில் நீர்கலங்க வருந்துகின்ற ஏழைகளுக்கு, ஆகாரங்கொடுத்து வருத்தத்தை மாற்றுவதே ஜீவகாருண்யம்.

கண், கை, கால், முதலிய உறுப்புகளிற் குறைவில்லாதவர்களாகி, ஆகாரஞ் சம்பாதிக்கத்தக்க சக்தியுள்ளவர்களும், பசியால் வருந்தி இளைத்தபடியிருக்கின்றார்கள், குருடும், செவிடும், ஊமையும், முடமுமாக இருக்கின்ற நமக்கு, ஆகாரம், எந்தவழியாய்க் கிடைக்கும், பசி எப்படி நீங்கும் என்று தனித்தனி நினைத்து நினைத்துத் துக்கப்படுகின்ற ஏழைகளுக்கு, ஆகாரங்கொடுத்துத் துக்கத்தை நீக்குவதே ஜீவகாருண்யம்.

பசியினால் வருந்துகின்றவர்கள், எந்தத் தேசத்தாராயினும், எந்தச் சமயத்தாராயினும், எந்தச்சாதியாராயினும், எந்தச்செய்கையாராயினும், அவர்கள் தேசவொழுக்கம், சமயவொழுக்கம், சாதியொழுக்கம், செய்கையொழுக்க முதலானவைகளைப் பேதித்து விசாரியாமல், எல்லாச் சீவர்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாக விளங்குவதை அறிந்து, பொதுவாகப்பார்த்து, அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே ஜீவகாருண்யம்.

சன்மார்க்க வொழுக்கத்திற்கு ஒத்த சத்துவ ஆகாரத்தால் பசி நிவர்த்தி செய்துகொள்ளத்தக்க மிருகம், பறவை, ஊர்வன, தாபரம் என்கின்ற உயிர்களுக்கும் பசிவந்தபோது, பசி நிவர்த்தி செய்விப்பதே ஜீவகாருண்யம்.

பசியை நிவர்த்தி செய்துகொள்ளத்தக்க புவனபோக சுதந்தரங்களைப் பெறுவதற்குரிய அறிவு இருந்தும், பூர்வகர்மத்தாலும், அசாக்கிரதையாலும், அச்சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ளாமல், பசியினால் வருந்துகின்ற சீவர்களுக்கு ஆகாரங்கொடுத்து, அந்தப் பசி வருத்தத்தை நீக்கி, திருப்தி இன்பத்தை உண்டுபண்ணுவதற்குக் காரணமாகிய சீவகாருண்யமென்கின்ற திறவுகோலைக் கொண்டுதான், மோக்ஷமாகிய மேல் வீட்டுக்கதவைத் திறந்துகொண்டு, உள்ளே புகுந்து, எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவித்து வாழவேண்டும்.

ஆகலில், ஜீவகாருண்யமென்கிற மோக்ஷவீட்டுத் திறவுகோலைக் காலமுள்ளபோதே சம்பாதித்துக் கொண்ட சமுசாரிகள்,

சரியை, கிரியை, யோகம், ஞானம், என்கிற சாதனசகாயங்களை வேண்டாமல், எக்காலத்தும் அடையாத இன்பவீட்டை அடைந்து, அவ்வீட்டுக்கதவைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்து நித்திய முத்தர்களாய் வாழ்வார்கள்.

புண்ணிய பூமிகளை வலஞ்செய்தல், புண்ணிய தீர்த்தங்களில் ஆடல், புண்ணியதலங்களில் வசித்தல், புண்ணியமூர்த்திகளைத் தரிசித்தல், ஸ்தோத்திரஞ்செய்தல், செபஞ்செய்தல், விரதஞ்செய்தல், யாகஞ்செய்தல், பூசைசெய்தல் முதலிய சரியை கிரியைகளைச் செய்கின்ற விரதிகளும், பக்தர்களும், இருடிகளும், உணவை நீக்கி, உறக்கத்தை விட்டு, விஷயச்சார்புகளைத் துறந்து, இந்திரியங்களை அடக்கி, மனோலயஞ்செய்து யோகத்திலிருக்கின்ற யோகிகளும், அளவிறந்த சித்தி இன்பங்களைப் பெற்ற சித்தர்களும், நித்தியாநித்தியங்களை அறிந்து, எல்லாப்பற்றுகளையும் துறந்து பிரமானுபவத்தைப் பெற்ற ஞானிகளும், ஜீவகாருண்யம் என்கிற திறவுகோலைச் சம்பாதித்துக் கொள்ளாதவர்களானால், மோக்ஷமென்கிற மேல்வீட்டிற்கு முன்னும்பின்னுமாக எதிர் சமீபத்தில் காத்திருந்து மீளவும் அத்திறவுகோலைச் சம்பாதிக்கத் திரும்புவார்களல்லது, கதவைத்திறந்து உள்ளேபுகுந்து, இன்பத்தை அடைந்து வாழமாட்டார்களென்று உண்மையாக அறியவேண்டும்.

இதனால் அறிவுவிளங்கிய ஜீவர்களுக்கெல்லாம் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்று அறியப்படும்.

அன்றியும் ஜீவகாருண்யவொழுக்கத்தை யுடையவர்களாகி அருந்தல் பொருந்தல் முதலிய பிரபஞ்ச போகங்களை அனுபவிக்கின்ற சமுசாரிகளெல்லாம், சர்வசத்தியுடைய கடவுள் அருளுக்கு முழுதும் பாத்திரமாவார்கள் ஜீவகாருண்ய வொழுக்கமில்லாமல் ஞானம், யோகம், தவம், விரதம், ஜெபம், தியானம் முதலியவைகளைச் செய்கின்றவர்களும், கடவுள் அருளுக்குச் சிறிதும் பாத்திரமாகார்கள். அவர்களை ஆன்ம விளக்கமுள்ளவர்களாகவும் நினைக்கப்படாது. ஜீவகாருண்ய மில்லாதபோது செய்யப்படுகிற செய்கைகளையெல்லாம், பிரயோஜனமில்லாத மாயாஜாலச் செய்கைகளே யாகுமென்றறியவேண்டும்.

எல்லாச் ஜீவர்களும் கடவுள் இயற்கையுண்மை யேகதேசங்களாதலாலும், அவ்வவர் இடங்களில் கடவுள் அருள் விளக்கம் விளங்குதலாலும், சமுசாரிகள் தமது தாய், தந்தை, புணர்ந்தோர், மக்கள், துணைவர் முதலிய குடும்பமட்டில் பசியாற்றிக் கொள்ளத்தக்க அல்ப சத்தியுள்ள சமுசாரிகள், தாய், பிதா, மக்கள், துணைவர் முதலிய குடும்பத்தாரைப் பசியினால் பாதவிக்கவிட்டு, அயலார்க்குப் பசியாற்றத் தொடங்குதலும், தம்மிடத்துப் பசித்துவந்த அயலாரை அக்கப்பசியால் பாதவிக்கவிட்டு, தங்குடும்பத்தார் பசியை ஆற்றத் தொடங்குதலும், கடவுள் அருளுக்குச் சம்மதமல்ல. ஆதலால் தமது குடும்பச்செலவைக் கூடியமட்டில் சிக்கனஞ்செய்து இருதிறத்தார் பசியும் நீக்குதல் வேண்டுமென்றும், அல்பசத்தியினுங் குறைவுபட்டுத் தமது குடும்பமட்டிலும் பசியாற்றுவிப்பதற்குப் பிரயாசையால் மிகச்சிறிய முயற்சியுடைய சமுசாரிகள், தமது குடும்பமட்டிலாவது பசியாற்றுவித்துக்கொண்டு தம்மிடத்தில் பசித்துவந்த அயலார் விஷயத்தில் மிகவும் தயவுடையவர்களாகி, அவர் பசியை மற்றொருவரைக் கொண்டாவது ஆற்றுவிப்பதற்குத் தக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், இயல்புள்ள பிரபல சமுசாரிகள், தங்கள் தங்கள் வருவாய்க்குத் தக்கவளவில், தாய், பிதா, புணர்ந்தோர்; மக்கள் துணைவர், உறவினர், சிநேகர், அடிகள், பெரியர் அடிமைகள், அயலார், பகைவர் முதலியவர்களுக்கும், தமது குடும்பத்திற்குச் சகாயங்களாகத் தேடிய பசு, எருது, எருமை, ஆடு, குதிரை முதலிய பிராணிகளுக்கும், பசியையாற்றுவித்துத் திருப்தியின்பத்தை உண்டுபண்ண வேண்டுமென்றும், விவாகம், புத்திரப்பேறு, தெய்வம்படைத்தல் முதலிய பலவகைச் செய்கைகளில்வேறு வேறுசடங்குகளும், வேறு வேறுபெருமைப்பாடுகளுங்குறித்துப்பொருள்செலவுசெய்தலை அமைத்துவிவாக முதலிய அந்தந்தச்செய்கைகளிலும், பசித்தசீவர்களுக்குப் பசியை ஆற்றுவித்து, இன்பத்தை உண்டுபண்ணுகின்ற சிறப்பினையே செய்யவேண்டுமென்றும். அப்படிச்செய்யில், பசித்தவர் பசிநீங்கி அடைந்த இன்பத்திலும் அநேகமடங்கதிகமான இன்பத்தை தாம் அடைவார்களென்றும் சத்தியமாக அறியவேண்டும்.

சமுசாரிகள் விவாக முதலிய விசேஷகாரியங்களில் பந்தலை அலங்கரித்தும், அவ்விடத்தில் வேறுவேறு சடங்குகளைச் செய்வித்தும், ஆடல், பாடல், வரிசை, ஊர்வலம் முதலிய விநோதங்களையும், அப்பவர்க்கம், சித்திரான்னம் முதலிய பெருமைப்பாடுகளை நடத்தியும், அக்களிப்பில் அழுந்தியிருக்கும் தருணத்தில், பசித்த ஏழைகள் முகத்தைப் பார்க்கவுஞ் சம்மதிக்கவில்லை. இப்படிப்பட்ட சந்தோஷகாலத்தில் தமக்காயினும், தமது மக்கள், துணைவர் முதலியோர்க்காயினும், ஒவ்வோர் ஆபத்து நேரிடுகின்றது. அப்போது அவ்வளவு சந்தோஷத்தையும் இழந்து துக்கப்படுகின்றார்கள். அப்படித் துக்கம்படும்போது, அலங்காரஞ் செய்த பந்தலும் சங்கல்ப விகல்பமான சடங்குகளும், ஆடல், பாடல், வாத்தியம், வரிசை, ஊர்கோலம் முதலிய விநோதங்களும், அப்பவர்க்கம், சித்திரான்னம் முதலிய பெருமைப்பாடுகளும் அந்த ஆபத்தைத் தடைசெய்யக் கண்டதில்லை. அந்தச் சுபகாரியத்தில் உண்மையுடைய பசித்த சீவர்களுக்கு ஆகாரங்கொடுத்துப் பசியை நீக்கி, அவர்கள் அகத்திலும் முகத்திலும் கடவுள் விளக்கத்தையும் கடவுள் இன்பத்தையும் வெளிப்படச் செய்திருந்தார்களானால், அந்த விளக்கமும் இன்பமும் அத்தருணத்தில் நேரிட்ட ஆபத்தைநீக்கி, விளக்கத்தையும் இன்பத்தையும் சத்தியமாக உண்டுபண்ணுமல்லவா? ஆகலின் விவாகமுதலிய விசேஷச்செய்கைகளிலும் தங்கள் தங்கள் தரத்திற்கொத்தபடி பசித்தவர்களது பசியையாற்றுவித்துத் திருப்தி இன்பத்தை உண்டுபண்ணுவது முக்கியமென்று அறியவேண்டும். சூலை, குன்மம், குஷ்டம் முதலிய தீராத வியாதிகளால் வருந்துகின்ற சமுசாரிகள் தங்கள் தரத்திற்கொத்தபடி பசித்தவர்களுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாக அனுசரித்தார்களானால், அந்த ஜீவகாருண்ய அனுசரிப்பே நல்லமருந்தாக அந்த வியாதிகளை நிவர்த்திசெய்து, விசேஷ சௌக்கியத்தை உண்டுபண்ணுமென்பது உண்மை. பலநாள் சந்ததியில்லாமல் பலபல விரதங்களைச்செய்து வருந்துகின்ற சமுசாரிகள், தங்கள் தரத்திற்குத்தக்கபடி பசித்த ஏழைகளது பசியை ஆற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார்களானால், அந்தச் சீவகாருண்ய அனுசரிப்பு நல்ல அறிவுள்ள சந்ததியை உண்டுபண்ணுமென்பது உண்மை. அற்பவயசென்று குறிப்பினால் அறிந்துகொண்டு இறந்துபோவதற்கு அஞ்சி விசாரப்படுகின்ற சமுசாரிகள், தங்கள் தரத்திற்குத்தக்கபடி பசித்த ஏழைகளுக்குப் பசியை ஆற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார்களானால், அந்தச் சீவகாருண்ய அனுசரிப்புத் தீர்க்காயுசை உண்டுபண்ணுமென்பது உண்மை.

கல்வி, அறிவு, செல்வம், போகம் முதலியவைகளைக்குறித்து வருந்துகின்ற சமுசாரிகள் தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசி

த்த ஏழைகளுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார்களானால், அந்தச் சீவகாருண்ய அனுசரிப்பு கல்வி, அறிவு, செல்வம், போகம் முதலானவைகளை உண்டுபண்ணுமென்பது உண்மை. பசித்தவர்களுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாகக் கொண்ட சீவகாருண்யமுள்ள சமுசாரிகளுக்கு, கோடையில் வெயிலும் வருத்தாது. மண்ணுஞ் சூடுசெய்யாது. பெருமழை பெருங்காற்று பெரும்பனி, பேரிடி, பெருநெருப்பு முதலிய உற்பாதங்களுஞ் செய்விக்கமாட்டாது. விடசுரம், விஷக்காற்று, விஷசுரம் முதலிய அசாக்கிரதைப் பிணிகளும் உண்டாகா. அந்தச் சீவகாருண்யமுள்ள சமுசாரிகள் ஆற்று வெள்ளத்தாலும் கள்ளர்களாலும் விரோதிகளாலுங் கலக்கப்படார்கள். அரசர்களாலும் அவமதிக்கப்படார்கள். சீவகாருண்யமுள்ள சமுசாரிகளது விளைநிலத்தில் பிரயாசையில்லாமலே விளைவு மேன்மேலும் உண்டாகும். வியாபாரத்தில் தடையில்லாமல் லாபங்களும் உத்தியோகத்தில் கெடுதியில்லாத மேன்மையும் உண்டாகும். சுற்றங்களாலும் அடிமைகளாலும் சூழப்படுவார்கள். துஷ்டமிருகங்களாலும் துஷ்டசெந்துக்களாலும் துஷ்டபசாசுக்களாலும் துஷ்டதெய்வங்களாலும் பயஞ்செய்யப்படார்கள். சீவகாருண்யமுள்ள சமுசாரிகளுக்கு எப்படிப்பட்ட ஆபத்துகளும், அசாக்கிரதையினாலும் ஊழ்வகையினாலும் சத்தியமாக வாரா. பசித்தவர்களுக்குப் பசியாற்றுவித்து இன்பத்தை உண்டுபண்ணுகின்ற சீவகாருண்ய வொழுக்கமாகிய மேலான விரதமானது தேவர்கள், மனிதர்கள், பிரமசாரிகள், சமுசாரிகள், தபசிகள், சந்நியாசிகள், ஆண்சாதியார், பெண்சாதியார், ரத்தியர், வாலியர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் முதலிய யாவராலும் அவசியம் செய்யத்தக்கதென்பது கடவுள் ஆணையென்றறியவேண்டும். பசித்தவர்க்குப் பசியை நீக்குகின்ற விஷயத்தில், புருஷனைப் பெண்சாதி தடுத்தாலும், பெண்சாதியைப் புருஷன் தடுத்தாலும், பிள்ளைகளைத் தந்தை தடுத்தாலும் தந்தையைப் பிள்ளை தடுத்தாலும், சீஷனை ஆசாரியர் தடுத்தாலும், அடியாரை ஆண்டவன் தடுத்தாலும் குடிகளை அரசன் தடுத்தாலும், அந்தத்தடைகளால் சிறிதும் தடைபடாமல் அவரவர்செய்த நன்மைதீமைகள் அவரவரைச் சேருமல்லது வேறிடத்திற் போகாதென்பதை உண்மை உண்மையாக நம்பிச்சீவகாருண்ய வொழுக்கத்தை நடத்தவேண்டுமென்றும் அறியவேண்டும்.

உள்ளபடி பசியால் வருந்துகின்ற சீவர்களுக்கு ஆகாரங் கொடுக்க நினைக்கும்போது நினைத்த புண்ணியரது மனசு, வேறு பற்றுக்களைவிட்டு ஏகாக்கிரகாரணமாகி நினைத்தபடியால், அந்தப்புண்ணியர்களை யோகிகளென்றே உண்மையாக அறியவேண்டும்.

ஆகாரங்கொடுக்க நினைத்தபடி உபசரித்துக் கொடுக்கும்போது, அவருண்ணுவது தாமுண்ணுவதாக அறிந்து களிக்கின்றபடியால், ஞானிகளென்றே உண்மையாக அறியவேண்டும்.

ஆகாரங்கொடுக்க வுண்டு பசி தீர்ந்தவர்களுக்கு, அத்தருணத்தில் ஆன்மாவின் உள்ளும் புறத்தும் கீழும் மேலும் நடுவும் பக்கமும் நிறைந்து கரணமுதலிய தத்துவங்களெல்லாங் குளிர்வித்து, தேகமுழுதுஞ் சில்லென்று தழைய, முகத்தினிடமாகப் பூரித்து விளங்குகின்ற கடவுள் விளக்கத்தையும் திருப்தியின்பமாகிய கடவுள் இன்பத்தையும் பிரத்தியக்ஷத்தில் தெரிசித்து அநுபவிக்கின்றார்களாதலால், அந்தப்புண்ணியர்கள் கடவுளைக் கண்டவர்களென்றும் கடவுளின்பத்தை யனுபவிக்கின்ற முத்தரென்றும் அறியவேண்டும்.

பசிநீங்க வுண்டு சந்தோஷித்தவர்கள் இந்தப் புண்ணியர்களைத் தெய்வமாகப் பாவிக்கிறார்களாதலால், இவர்களை தெய்வமுமென்று உண்மையாக அறியவேண்டும்.

ஜீவகாருண்யவொழுக்க முடையவர்களாகி ஜீவர்களைப் பசியென்கின்ற அபாயத்தில் நின்றும் நீக்கச்செய்கின்ற உத்தமர்கள் எந்தச் சாதியாராயினும், எந்தச் சமயத்தாராயினும் எந்தச் செய்கையை யுடையவர்களாயினும், தேவர், முனிவர், சித்தர், யோகர் முதலிய யாவராலும் வணங்கத்தக்க சிறப்புடைய ராவர்களென்று சர்வசத்தியையுடைய கடவுள் சாக்ஷியாக சத்தியஞ்செய்யப்படுமென்றறியவேண்டும்.

---

## அறநிலைவிளக்கம்.

### அறுசீரடியாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மருவாணைப் பெண்ணாக்கி யொருகணத்திற் றிறல்வயங்கு மதுகைப்பெண்ணை
யுருவாணை யுருவாக்கி யிறந்தவரை யெழுப்புகின்ற வுறுவனேனுங்
கருவாணை யுறவிரங்கா தயிருடம்பைக் கடிந்துணுங் கருத்தனேலெங்
குருவாணை யெமதுசிவக் கொழுந்தாணை ஞானியெனக் கூறொணாதே.

ஜீவகாருண்யவொழுக்கம் முற்றிற்று.

உ

சிவமயம்.

# கொலைமறுத்தல்

"கொல்லா விரதங் குவலயமெல்லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பராபரமே"
—தாயுமானவர்.

உலகினி லுயர்ந்தோ ருரைத்தபா வங்களுட்
கொலையெனும் பாவங் கொடிது கொடிது
கோவென் றலறக் கொடுமனத் தோடும்
உயிரை வதைத்தல் ஊனப் பழக்கம்
உயிரு முடலுஞ் சேர்ந்த புதுமை
உரைக்கநீ யுணராய் உன்னைப் போலவே
மற்றுள வுயிருந் தின்று குடித்து
இன்ப துன்ப மீசனாற் பெற்றுக்
கால முற்றிக் கழிதல் வேண்டும்.
உயிரையு முடலையும் ஒன்ற தாகக்
கூட்டிய பிரானே குலைத்தலும் வேண்டும்;
அன்றியுங் கேளாய்; அரிய மகனே!
உலகி லுயிர்கள் உடலுடன் கூடிப்
பலபல விதமாய்ப் பிறந்திறந் துழலும்
மனுடர் தேவர் மிருகம் பறவை
ஊர்ந்து திரியும் பூச்சியும் புழுவும்
நீரில் வாழும் நெடிய மீன்களும்
நண்டு மிறாலும் நாதனார் அருளால்
தாவர முதலாச் சாற்றிட நின்றன.
ஓரறி வோடும் ஈரறி வோடும்
மூன்று நாலு முற்றி ஐந்தாய்
ஆறி ஏறி ஏற்ற மாக
அப்பனே! வளரும். அன்புடன் கேளாய்;
உற்றுநீ பார்க்கில் உலகினி லுயிர்கள்

எல்லா மொன்றே; ஊமர்கள் உணரார்.
வேறு பிரித்து வெறுமொழி பிதற்றி
நரக வாயில் நமக்கென நிற்பார்.
மாவும் பலாவுந் தெங்குந் தேக்கும்
ஆலு மரசும் வேறு வேறு
வர்க்க மாக வளர்ந்த வேனும்
சாதியொன் றாகிச் சாருமன் றோ?
மரமென யாரும் மதித்திடு வார்காண்.
வித்தில் முளைத்து வெளியே தழைத்து
இலையுந் தளிரும் எறிந்து வளர்ந்து
மரமென நிற்கும் மாற்ற மொன்றே.
ஊணும் உறக்கமும் இன்பமுந் துன்பமும்
உயிர்களுக் கெல்லாம் உள்ளன வாமே.
நாமு முயிரில் நாடில் ஒன்றே.
நாத னவனே ஆவன் யார்க்கும்.
ஆக்கவும் அழிக்கவும் அவனே தாதா.
உன்றன் உடம்பில் ஒருவர் அடித்தாற்
கதறிப் பதறிக் கன்றுதன் தாயைத்
தேடு மாபோற் றிகைப்புட னின்று
வீட்டுக் கோடி விளைந்ததை யுரைப்பாய்
உன்றன் மேனியிற் றுன்பமே வியதால்.
உன்னை அன்பாய் அன்னை பார்ப்பாள்.
அதுவே போல ஒவ்வோ ருயிரும்
கன்றுங் குட்டியுங் குஞ்சுங் குழந்தையும்
ஆக வளர்ந்து தமக்குந் தாய்க்கும்
அன்பு கூடி அருகினி லோடும்;
இவற்றுள் ஒன்றை இன்னற் படுத்தினால்,
இறைவனு நோவான்; உயிரும் பதைக்கும்
உனக்குந் துன்பம் உடனே கூடும்.
பிறர்க்குத் துன்பம் பண்ணுவ தாலே
பீடையும் நோயும் பிறவியும் வறுமையும்

உன்னிழல் போல உன்னைத் தொடரும்.
பிறவித் துன்பம் பெரிதோ?, சிறிதோ?
ஆடும் மாடும் ஆன உயிர்கள்
கோழியும் மீனும் வாய்விடாச் சாதி
வாழ்த்தினுஞ் சரியே; தாழ்த்தினுஞ் சரியே?
அடிக்கினுங் குறைக்கினும் ஆரிடம் பேசும்?
அவைக்குத் துன்பம் ஆக்கிடு மவனே,
தனக்குத் துன்பந் தானே தேடுவன்.
எந்த உயிரும் இறைவன் கோவில்;
தடிகொண் டடித்தல் தலையை அறுத்தல்
குத்தல் பிடித்தல் கொடூரஞ் செய்தல்
கொலையொடு சேர்ந்த தொலையாப் பாவம்.
மன்னுயி ரெல்லாம் உன்னுயிர் போலவே
மனத்திற் கொண்டு மாதவ னடியை
மறவா திருப்பாய்; அறமிது வேகாண்.
இராச குமார னிரதமேற் செல்லச்
சில்விற் கன்று சிக்கி இறந்தது.
பசுத்தான் கதறிப் பதைபதைப் போடும்
பாலன் றந்தையைப் பார்த்தே யோடி
மாளிகை வாசல் மணியை அடிக்க,
அறநீதி வழுவா அரசன் றானும்
காரிய மறிந்து கன்றினைக் கொன்ற
காதன் மைந்தனைத் தேரின் காலிற்
கீழே கிடத்தித் தேரினை யூர்ந்தான்.
கன்றை யிழந்த கறவை போல
மைந்தனை யிழந்து மன்னன் பதைத்தான்.
ஆயினு முயிரை அழித்த தாலே
சேயினும் பெரிதாய்ச் செங்கோல் செலுத்தினான்.
மனுநீதி கண்ட மாச்சோழன் என்று
உலகம் புகழ, உமையாள் பாகன்

திருவருள் புரியச் சிறந்துயிர் பெற்றுக்,
கன்றுங் குமரனுங் கடிதி லெழுந்தார்.
இறைவன் செயல்தான் இப்படி ஆக,
எவ்வுயிர்க் காயினும் ஔவையார் சொற்படி
அறஞ் செயவிரும்புமின் மறஞ்செயா தொழிமின்;
அறமெனப் படுத லுயிர்க்கிதம் புரிதல்
கொலையி னொடு கொடிதெனப் புகலும்
புலையெனும் புன்மை கூடியேநிற்கும்
புலாலினை யுண்டான் புலைய னவான்.
ஊனை விரும்பி யுயிரைக் கொல்லும்
பாதக ரோடு பழகினும் பாவம்.
மீனு மிறைச்சியும் தேனுங்கற் கண்டுமோ?
காலந் தப்பிற் கரைந்து நாறும்.
புழுத்து நெளியும் புன்பலால்; அப்பா!
இத்தை இவர்கள் இனிதென வேண்டிக்
கழுகு கூகை காகநாய் நரிபோற்
பிணத்தைத் தின்று மணத்தை யுவந்து
உடம்பை வளர்த்து உலகின் றுரே.
வியாதியோ வென்றால் விட்டிடா துன்னை.
உடம்பு தளரவும் உண்ணின்று வருத்தித்
தீரா நோய்களாற் றீமையே விளையும்.
ஆயுசு குன்றும்; அப்பா கேளாய்!
காயுங் கனியுஞ் சுத்த போசனம்.
சுத்த தாதுவுஞ் சுத்தமே யாகும்.
அன்புந் தயையும் அணைந்து நிற்கும்.
மருகத தனலம ஒருவிப் போகும்.
கோபமுங் கொடூரமுங் காமமு மனுகா.
பொறையுந் தவமும் பொருந்தி வளரும்.
"புலையுங் கொலையுங் களவுந் தவிர்" க
கொல்லா விரத மெல்லார்க்கு நன்றே.

சுபம்.